

“சித்ரா பௌர்ணமி”
அன்று நடந்த ஓர்
“ஸத் ஸங்கம்”
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# “சித்ரா பௌர்ணமி”

அன்று நடந்த ஓர்

# “ஸத் ஸங்கம்”

# பொருளடக்கம்


1. சித்ரா பௌர்ணமி அன்று நடந்த ஓர் ஸத்ஸங்கம் ------------1
2. வாழ்ந்தாலும் தூற்றும் தாழ்ந்தாலும் தூற்றும் ------------------57
3. மூவினையின் பிணைப்பு -----------------------------------------66
4. அடங்கு அடக்காதே -------------------------------------------74
5. பணிவே பாதை --------------------------------------------------80
6. மனமே மாயை மனமே மஹத்து --------------------------------90
7. திருவடியின் பெருமை -----------------------------------------99


எல்லாம் நீ!



ஸ்ரீ ஹம்ஸ்தேவ் மஹராஜ்



# "ஓம் ஸ்ரீ குரு திருவடிகளே!" "நம்பினோர் கெடுவதில்லை"!

இடம்:- உதகையில் தொட்டபெட்டா.

பங்கேற்போர்:- ஸ்ரீ ஹம்ஸ்தேவ்! ஸ்ரீ தோதாபுரி! ஸ்ரீ பரமஹம்ஸர்! ரிபு கீதாநாயகன் ஸ்ரீ ரிபு! இவர்களுடன் ஓர் வைத்தியனும், ஓர் திருடனும் (கண்ணன்)

பொருள்:- "தியாகம்" "யோகம்" "ஆத்மஞானம்!!!"

<u>வைத்தியம்</u>:- (ஓர் ஒளி வட்டம் பிரகாசிக்க, அதனுள் இருந்து ஓர் சூட்சமரூபம் பிரகாசித்தது) கூர்ந்த திருஷ்டியால் நோக்கிய வண்ணம், யாரது? ஹம்ஸ் தேவ் ஜீயா?

<u>ஹம்ஸ் தேவ்</u>:- என்னபாபா! எம்மை நீ தூரமாக பார்த்தது இல்லை. ஆனாலும், குறிப்புடன் எம்மை, இன்னார் என தெரிந்து கொண்டீரே. அது எப்படி?

<u>வைத்தியம்</u>:- ஹேமஹாத்மா! மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கவும் வேண்டுமோ? யாம் உம் குழந்தை தானே? <u>யாமே நல்ல மெய்யப்பன்</u> எனக் கூறும், எம் கர்த்தரைப்போல் <u>நீண்ட தடியுடன், கம்பீரமாக நிற்கும் உம் அழகு கோலமும்.</u> <u>பொக்கை வாயைக் காட்டும் நிலையில், அமர்ந்த உம் அழகு கோலமும்.</u>



உ

மறக்க முடியுமா என்ன? யாம் உன் இருப்பிடம் வந்த மூன்றாம் நாளே, தாங்களே நேரில் வந்து உன்னுடைய ஸ்ரீ குருதேவருக்கு மட்டும் தானா புஷ்பாஞ்சலி? இந்த ஏழைக்கும் செய்யலாகாதா? என இரங்கிக் கேட்டு, எம் புஷ்பாஞ்சலியை ஏற்றுக் கொண்ட திவ்விய ரூபம் எவரால் மறக்க முடியும்?

ஹம்ஸ் தேவ்:— (சற்று கண்களை மூடிப் பார்த்த பிறகு) ஓஓ தாஸிபாபா! உம் திருடன் (கண்ணன்) சாமானியன் அல்ல. எம் சொரூபத்தில் அவனே வந்து, புஷ்பாஞ்சலியை ஏற்றுக் கொண்டானா? அதனால் தான் உம் ஸ்ரீ குருதேவர் படத்துடன், எம் படத்தையும், இணைத்து வைத்து விட்டாயா?

வைத்தியம்:— எம் ஸ்ரீ குருதேவர் வேறு! தாங்கள் வேறு? "**நாமரூபம்!**" வேறுபட்டால், இருப்பாகிய "**ஸத்!**" வேறுபடுமா? மாறுபடுமா? மறைபடுமா? அனைத்தும் "**ஒன்றென!**" உணர்ந்து அது ஆனபின், "**பேதமேது?**" அங்கு சந்தேகம், கலக்கம், பயம் ஏன்?

ஹம்ஸ் தேவ்:— ஓகோ நீ சுத்த அத்வைதி; அதனால் தான், இந்த போடு போடுகிறாய்.

வைத்தியம்:— ஏன் தாங்களும் தான், "**யோகபுருஷரை!**" இருந்தாலும், தாங்கள் சமதாவத்தில் வாழ்ந்த, எம் ஸ்ரீ பரமஹம்ஸ தேவரின் "**ஸத்குரு!**" ஆன



மஹான் "ஸ்ரீ தோதாபுரி"! அவர்களின் பரிச்சயமும் உண்டோ? அவர்களின் மூலமாக அத்வைதம் உணர்ந்தும், அதை முழுமையாக ஏற்காமல், "யோகத்தை" மட்டும் வலியுறுத்தி, ஸ்தாபித்த காரணமேதோ?

ஹம்ஸ் தேவ்:— ஆம் அருமை பாபா! இக்கலியுகம் சக்திக்கும், வலிமைகளுக்கும், "பேர், புகழ்" இவைகளுக்கு உரிய காலமாக இருப்பதால், யாம் யோகத்தோடு கூடி ஞானத்தையும் அனுபவித்தோம். ஆனால் எம் அன்பர்களோ ஒன்றிரண்டு பேர் மட்டும், எம் போன்று யோகத்தையும், ஆத்மஞானத்தையும் அனுபவித்து அறிவு கரைந்து கலந்து மயமானார்கள். மீதி "ஏனையோர்" யோகத்தோடு நின்று கொண்டார்கள். "யத்பாவம் தத்பவதி" என்று: "நீ எதை விரும்புகிறாயோ அது ஆவாய்"! என்ற உண்மையின் ஸாஸ்திரப்படி, அது ஆகிவிடுகிறார்கள். அதற்கு யாமும், நீயும், பொறுப்பாக மாட்டோம். ஆனால் நீயோ



"பழம்பெரும் ஸூத்திரதாரி! யோகத்தை தொடாமலேயே, தியாகத்தை மட்டும் வலியுறுத்தினாய்! பேர், புகழ், பட்டம், பதவி இவைகளில் அன்பர்களை மயங்கவிடாமல், அரவணைத்துச் செல்கிறாய். இது உன் ஒருவனுக்கே முடியும். இக்கலியின் கோர குண தோஷத்தில், எவருக்கும் சாத்தியமாகாது. "வியாபாரம்" என்ற "நெருப்புக்கே" உரிய காவலம்.

வைத்தியம் :- ஹே மஹாத்மா! தாங்களுக்கும், மஹான் தோதாபுரி அவர்களுக்கும் தொடர்பு உண்டா? ஒருவருக்கொருவர், கருத்துப் பரிமாற்றம் செய்ததுண்டா? அவருக்கும் தாங்கள் போன்று யோகத்தில் அனுபவம் உண்டா?

ஹம்ஸ் தேவ் :- ஹே பாபா! தோதாபுரியும், யாமும் பல இடங்களில், பல சத்ஸங்கங்களில் கலந்துரையாடியிருக்கிறோம். ஆனால் அவர் "சுத்த அத்வைதி" "உம் போன்றே." அவருடைய ஸத்சிஷ்யன் "பரமஹம்ஸர்" போன்றே, மனதை "உருக்கும் பக்தி" இல்லையென்போம்.



உ

எங்கள் இருவரின் உரையாடலின் மத்தியில், இரு ஜோதி பிழம்புகள் எங்கள் முன் தோன்றின.

வைத்தியம்:- ஹே மஹாத்மாக்களே! தாங்கள் இருவரும், யார் என தெரிய வேண்டுகிறோம். அடுத்த நொடியில் அங்கு, எம் "ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸ தேவரும்!" அவருடைய ஸத்குரு! "மஹான் தோதாபுரி!" அவர்களும் பிரத்யக்ஷமானார்கள்! (அவ்விருவரும் ஒரே குரலில்) என்ன பாபாஜீ! எங்கள் இருவரின் நாமப்ரஸன்னமாகிறதென்ன? ஏதாவது விஷேசமா?

வைத்தியம்:- (அவ்விருவரையும் நமஸ்கரித்தபடி) ஹே மஹாத்மாக்களே! மஹாபாரதத்தில் ஓர் சம்பவம் உண்டு. அதாவது, நிறைந்த அமாவாசை "நாள்" என்றிருக்க, ஒரு நாள் முன்பே, எம் திருடன் (கண்ணன்) நதியில் இறங்கி தர்ப்பணம் செய்தானாம். "சூரிய சந்திரன்!" இருவரும், ஒன்றாய் எம் கண்ணன் முன்நின்று கொண்டு, கண்ணா! இன்று என்ன விஷேசம்? நாளையல்லவோ அமாவாசை. இன்று தர்ப்பணம் செய்கிறாயே? என்றார்களாம்.



உ

எம்பிரபு கேட்டானாம்:- ஹே சூர்ய சந்திரர்களே! அமாவாசையின் முக்கிய பொருள் என்ன என்றாயீ? சூரிய சந்திரன் இருவரும், ஒரே இடத்தில் கூடினால், அன்று அமாவாசை யென்றார்களாம்.

உடனே எம்திருடன் கேட்டானாம்:- ஆமாம் உண்மை தான். நீங்கள் இருவரும் கூடி விட்டீர்கள். அப்படியானால் இன்று அமாவாசைதானே? ஆகவே தர்ப்பணம் செய் இரும் என்றானாம் எம்மாயவன்.

அதேபோல் நீங்கள் இருவரும், இங்கே கூடி விட்டீர்கள். ஆகவே இன்று, "சித்ரா பௌர்ணமி" சரிதானே "மஹாமஹாத்மாக்களே!" எனப் பணிவுடன் கேட்டோம். உடனே அவ்விருவரும் கலகல கலகலவென சிரித்துவிட்டார்கள்.

ஸ்ரீபரமஹம்ஸர்:- ஹே பசுமையான பாபாஜீ! உன் வாக்குக்கு யாம் தலை வணங்குகிறோம். நீ சாமான்யன் அல்லவே! தெய்வநிலையில் எம்மாயக் கண்ணனும் நீயே! "பர" நிலையில் காவத்தை உனக்குள் ஆக்கிக் கொண்டு, எந்த கட்டுப்பாடும் இன்றி, சுதந்திர "பறவையாய்"



"உன்னை" நீயே தோற்றுவித்துக் கொண்டும்; "உன்னுள்" நீயே மறைத்துக் கொண்டும், கர்த்தாக்களுக்கும் அதீதமான "பரமாய்" இருப்பவன் நீ ஒருவனே! உன்னையன்றி இவ்வுலகில், எவரும் கண்டு கொள்ள முடியாதுதான். காரணம் "யோகமாயாவே" உன்னுள் அடங்கிஇருக்கிறது. என சொல்லிக்கொண்டே வந்த எம் ஸ்ரீபரமஹம்ஸர், எங்கே பாபாவைக் காணோம்!? என தேடினர் போலும்? அங்கு அந்த வைத்தியம் அம்மூவரின், "அறையங்களில்" விசுத்த கறைந்து மயமான நிலையில் "திகம்பரராய்" மயமாகியது! அந்நிலையை அதுவே அறியும்.

உடனே அம்மூவரும், ஆறு கரங்களினாலும் தூக்கி அரவணைத்து நிலையில், அதற்கு வடிவமும் தந்து, மெய்யுணர்வும் தந்து "ஸைபாபாவே" "இன்றும்" "சிவகாமம்" எங்களுக்காகவே இருப்பாயாக! "மறைந்துவிடாதே" மறைத்துக் கொள்ளாதே! என ஆசி கூறினர். பின்னர் நால்வரும் பழைய நிலைக்கு வந்தோம்.



உ

வைத்தியம் :- ஹே மஹாத்மா! தோதாபுரி மஹாராஜ்! உங்களுக்கும் யோகம் முழு அனுபவம் உண்டோ?

தோதாபுரி :- என் குழந்தாய்! பாபா! ஆமாம். யானும் ஓர் யோகியே! ஆனாலும் முன் நம் ஸ்ரீ மஹான்களுடைய, அத்வைத ஞானமும் உண்டு. ஆனால் யாம் யோகத்தை ஆத்ம விசாரத்தோடு இணைத்துக்கொண்டதால். எம் யோகம் "சக்தி" மற்றும் எந்த "வல்லமைகளும்" தொடக்காமலும், அதைக் காட்டாமலும், ஆத்ம விசாரத்தினுள்ளேயே, கலந்து மறைந்து விட்டது. ஆனால் இன்றைய யோகிகள், யோகத்தில் முழுமை பெறமலேயே, சில சொல்வன்மை, சில செயல்வன்மை, கிடைத்தவுடனே, திசைமாறி விடுகிறார்கள். காரணம் மேலே சொன்ன இரண்டினாலும், பேர், புகழ், பட்டம், பதவி, "பணம்". "பெண்" இவைகளின் பிடியில் சிக்குண்டு, "சேவை" யென்ற பெயரில் பெரும், "வியாபாரி" வேலையாக செய்து, ஆகிவிட்டார்கள். காரணம், எவரும் விசாரஞானத்தை விரும்புவதில்லை! இங்கு இவர்களை சொல்லிகுற்றம் இல்லை. கலிதோஷம் இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற விதி ஆகிவிட்டது!



வைத்தியம்:- ஓம் பிரபுவே! தாங்களிடம், “பக்தி” அனுபவம் இல்லாமல், ஞானம் சாத்தியமாகாதே. பக்தி இல்லாமலேயே, யோகம் சாதித்து அறிவையே விசாரம் செய்து, ஞானம் சாத்தியம் ஆனதா? பக்தி செய்து, யோகமும் அனுஷ்டித்து, விசாரணையும் இருந்து, இப்படி “முறையோடு” ஞானம் பெற்றீர்களா? உங்கள் அனுபவம் எப்படி? ஓ மஹாத்மாவாகிய, ஹம்ஸ்தேவ் ஜீ அவர்களே! நீங்களும் ஓர் யோக புருஷனே! உங்களின் அனுபவம் என்ன?

ஹம்ஸ்தேவ்:- என்னதானிபாபா! எங்கள் இருவரையும் விசாரணை செய்கிறாயா?

வைத்தியம்:- அபசாரம்! அபசாரம்! உங்களை விசாரணை செய்ய யாம் யார்? இதை படிக்கும் அன்பர்களுக்கும், ஓர் “அனுபவம்” கிடைக்குமே. அதனால் தான் யாம் கேட்கிறோம். தவறாக தோன்றின், இவ்வேண்டுதலை மன்னிக்கவும்.

ஹம்ஸ்தேவ்:- அப்படி ஒன்றும் இல்லை பாபா! ஓர் வார்த்தைக்காக அவ்வாறு கேட்டோம். ஆனாலும் உம் போன்று, “பணிவு” ஓர் சாதகனிடம் இருந்தால் போதும். அவனிடம் பக்தியோ, யோகமோ, விசாரஞானமோ அனைத்தும் வெகு எளிதாக சாத்தியமாகும். மேலும் ஓர் நிலையில் எம் அனுபவத்தை சொல்வது என்றால்?



உ

இந்த யோகத்தின் நிலை, "வாலிப பருவமாக" இருப்பதால், எந்த யோகியிடமும் "பணிவு" "கனிவு" "அடக்கம்" வருவதே இல்லையென, பிரமாணமாக சொல்லுவோம். யோகியாகிய எங்களிடம் அஹங்காரம் அதிகாரம் அதிகமாக இருப்பதால், "நான், என்றல்", எங்களிடம் அழிவதில்லை. ஆனாலும் எங்களால் சாதிக்க முடியும்! சாதித்தும் விட்டோம்!! ஆனாலும் உன் போன்று, பணிவு, கனிவு, அடக்கம் இல்லாத தன்மையாலும், நான் என்றல் என்ற, அஹங்காரமும், அதிகாரமும் அழியாத தன்மையினாலும், எங்கள் "ஞானம்" சற்று "வறட்சி" ஆனதே! உன் போன்று, "கனிந்த ஞானம்" இல்லையென்றே, பிரமாணமாகச் சொல்லுவோம்!



தோதாபுரி :- உண்மை தான் பாபா!
எம் அன்பர் ஹம்ஸ் தேவ் சொன்னது
ஸத்தியமே! யாமும் எம் குழந்தையான
இந்த பரம ஹம்ஸனிடமே, பல முறை
வாதாடியதுண்டு. அவன் உருகி, பாடி,
ஆடி, கரைந்துருகி, பக்தி பண்ணும் போதும்,
கரதாளம் போட்டு ஆடி நர்த்தனம் செய்யும் போதும்,
யாம் கேலியாக, "சப்பாத்தி" தட்டுகிறாயா?
எனச் சொல்வோம். ஓர் சமயம் பிரம்மோபதேசம்
செய்யும் நிமித்தம், "மஹாவாக்கிய"
உபதேசம் செய்ய, ஓர் காலத்தையும் குறித்து விட்டு,
அதற்கென அமைத்த குடிலில், அவனை அழைக்கும் போது,
"எம் அம்மாவிடம்" அனுமதி கேட்டு
வருகிறேன் என (சொல்லி) சென்றான். அவன் அம்மாவிடம் கேட்
டானாம்! (அது எந்த அம்மாவோ? என்ன கேட்டானோ?)
அந்த அம்மாவும் :- குழந்தாய்! இந்த தோதாபுரி,
ஹிமாலயா விலேயே பல காலம், அவதூதனாய் சஞ்சாரம்
செய்து நிலையில், சுத்த ஞானியாய் ஓர் ஸத்சிஷ்யனைத்
தேடித் திரிந்து கொண்டிருந்தான்.
"யாம் உனக்காகவே" இங்கு
கொணர்ந்து சேர்த்திருக்கிறேம். அவனிடம் சென்று



உ

தீக்ஷையும், உபதேசமும், பெற்று
நீ இதுகாலபரியந்தம் செய்த பக்தியும்,
உன் சாதனையின் முதிர்ச்சியும் அதன்
பயனாக "பிரம்மஞானம்"!!!
பெறுவாய் என, அனுமதியும் பெற்று வந்ததாக சொல்லுவான்.
அவன் அம்மாவோ, அவள் அனுமதியோ, வெறும்
"மனப்பிரமைதானே"???
என எண்ணியதுண்டு ஓர் காலம். அவனிடம் சிலகாலம்
பழகிய பின்புதான், "நாமரூபமற்ற
ஓர் ஸ்ரீபகவானை", ஏன் நம்பி பக்தி
பண்ணுகிறோம் என்ற அனுபவமும் "எம்பரம
ஹம்சனை", நான் யாம் உணரப்பட்டோம்.
அவ்வழி வந்தவனே அந்த "பாபாவும்",
ஹம்ஸ்தேவ்:- வாஸ்தவமே எம் தோதாபுரி, நாம் யோகம்
என்ற நிலையில், உடலை வருத்தி வாயுவை கும்பகம் பண்ணி,
அவ்வாயுவை நம் நிலைக்கு கொண்டுவர, அரும்பாடுபடுகிறோம்.



உ

ஆனால், உம் இந்த பாமர ஜனங்களோ,
இந்த யாகமோ, எந்த நியமமும் இல்லாமல்
ஓர் நாமரூபமுள்ள இறைவனை முழுமையாக
"நம்பி, பரிபூரண
"சரணாகதி" பண்ணிவிட்டு,
"சும்மா சுகமாக", இருந்து விடுகிறார்கள்.
நாம் நம் சுயபலத்தால், பிராணனை அடக்க கஷ்டப்
பட்டு, அப்புறம் விசாரணை செய்து, ஞானம் பெறுகிறோம்.
ஆனால் இவர்கள் தெய்வபலத்தால், "ஆசைகளை"
அழித்து (மனோநாசம் செய்து) ஞானம் பெறுகிறார்கள்.

"நாம் காற்றை நம்புகிறோம்
ஆண்டவனை நம்புவதில்லை",
ஆனால் அவர்கள்
"கடவுளை" நாமரூபத்தோடு நம்புகிறார்கள்,
"வெறும் காற்றை நம்புவதில்லை",
நாம் சாதனை, சாதனை என காற்றைக் கட்டுவதற்கு அரும்பாடுபடுகிறோம்.
அவர்கள் அது (காற்றை கட்டுவது) வேதனை, வேதனை, என இறைவனிடம் விட்டுவிட்டு,



ஆடிப் பாடிக் கொண்டாடி, அது ஆகிவிடுகிறோர்க் நாம் சாதித்து விட்டோம் என, "பெருமை"! கொண்டாடி ஆனந்திக்கிறோம்.

அவர்கள் "பெருமையும்"! எந்த "சிறுமையும்"! இல்லாமல், சுகமாக இருக்கிறார்கள் என, சொல்லிமுடித்தார் ஹம்ஸ்தேவ்.

பரமஹம்ஸர் :- இக்குழந்தையான திருவடிக்கு, அவன் தந்தையும், குருவுமான, வேதவியாசர், முதல் புஸ்தகமான மிகமிக பழைமையான, எம்கதையும் கருத்துமான, புஸ்தகம் ஒன்றை, கொடுத்தார் போலும்? அவன் அக்கருத்தை படிக்கும் போதே, "கண்ணருவி"! பெருக்கெடுத்து ஓடும். யாம் சூட்சுமமாகவே அவனுடன் இருந்து கொண்டு, அந்த நேரம் அவனுக்கு எது தேவையோ, அப்பக்கத்தை இயல்பாக, புரட்டிக் கொடுப்போம்! (யாம் புரட்டிக் கொடுப்பதை) "அவன் அதை அறியான்! யாம் ஒருவனே "அதை அறிவோம்"!! அவனை யாம் அறிவோம். அவன் எம்மை உணர்வான். யாம் அதில் அந்த வைத்ததை, அதிரகஸ்யமாக, சூட்சுமமாக



உ

வெளிப் படுத்தினேன். அவன் அதை, ஸ்பஷ்டமாக உணர வேண்டி, அத்வைத குருவான "ஜகத்குரு ஆதி சங்கரரின்" உபநிஷத்துக்களையும், விவேக சூடாமணி, பஜகோவிந்தம், இன்னும் அனேக வேத "வேதாந்த" கருத்துக்களின் உட்புகுந்து விட்டான். இவன் தந்தையும் குருவுமான வியாச பெருமான், இவனுடைய "அந்தஸ்தை" உணர்ந்து, இவன் "ஜீவ அழிப்பின் நிலைக்கு" தோன்றிய ஓர் பரபுருஷன் என உணர்ந்து, முடிந்த முடிவாகிய, எந்த கலப்பும் இல்லாத, "ஆதி" நூலாகியும், யோக குருவான "பூஜ்ய சுஜிரை மூர்த்தி" யானவர், தம் உத்தம மாணவனாகிய, "ஸ்ரீ சுப்பு" என்ற மஹா அனுக்கிரஹ உபதேசித்து, சிவ ரகஸ்யமான, சுத்த அத்வைத நூலாகிய "ரிபு கீதை"யை



அதை சுவைத்து அனு
பவித்து உணர்ந்து, உ
உணர்ந்து, அது அருவாயாக என
பணித்து, ஸ்ரீ குருதேவர் சமாதி ஆனார்.
இவனுடைய ஸத்குருவாகிப்படி, "நம்
ஸ்ரீ முனிவனின்
ஸ்ரீ கீதை" இக்குழந்தை கையில், 1992ல்
கிடைத்தது. இவனுடைய ஸ்ரீ ஸத்குருவும், தெய்வமும்
"தாமும் ஆன" அந்த கபட நாடக சூத்திர
தாரியான, "கமல கண்ணனி
ன்" கருணையும் இணைந்தும், இவனே "பர"
சொரூப அம்ஸமாக இருப்பதாலும், 1994ல்
மதுரையில் வைத்து, இவன் உள் "ஆழ்ந்து"
போகும் போது, முன் முந்தைய மூன்று யுகங்களி
லும் வாழ்ந்து அனுபவித்த, சமகால மஹாத்மா
க்கள் "ஸ்ரீமத் ஸ்ரீ கீதையை"
இவன் வாயிலாக கேட்டு, அனேகர் மறைமுகமாக
இவன் "ஸ்ரீ முனிவனே" என
வாழ்த்திச் சென்றார்கள். இவ்வாறு, எம் பரம



உ

ஹம்ஸதேவர் பேசிக் கொண்டிருக்கும் போதே, முன்பு போன்று, ஓர் ஒளிவட்டம் தோன்றிது. அவ்வொளி வட்டத்திலிருந்தே, ஓர் கம்பீரமான ஒலி வந்தது.

அவ்வொலியாவது:— "ஏம்" வாசகமும், "எம் கதையின்" அனுபவ வாசகமும், கேட்கவே, அது என்ன என பார்த்துப் போகவே வந்தோம், என சொல்லிக் கொண்டே, அவ்வொளிவட்டத்தினூடே "பூஜ்யஸ்ரீ" முனிவன், தோன்றினார். வந்தவுடனே, அப்பைத்தியத்தை சற்று கூர்ந்து நோக்கிய வண்ணம், "அந்த பாபாவா????"

என சொல்லிக் கொண்டே (அது எந்த பாபாவோ யாம் அறியோம்)

(மற்றும் இவ்வறையும், ஸ்ரீ ஹம்ஸ் தேவ் மஹராஜ், மஹான் தோதாபுரி மஹாராஜ், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்) இவர்களை, நடவிக் கொடுத்த வண்ணம்.



"மஹாத்மாக்கள்" எல்லாம் இங்கு கூடிவிட்டார்களா? அதனால் தான் இந்த "சித்ரா பௌர்ணமி" அத்தனை கோலாகலமாக தேவலோகத்தில் தேவர்கள் எல்லாம் கொண்டாடுகின்றார்கள் போல் தெரிகிறது??? என ~~சொல்லிவிட்டு~~,

அந்த வைத்தியத்தைப் பார்த்து சிரித்துக் கொண்டே என்பாபா! இங்கும் ஸ்ரீமத் ரிபு கீதை, பாராயணம் தானா? நீர் சென்ற இடம் எல்லாம், ரிபு கீதையை பாராயணம் செய்து,

உம்முடன் படித்தவர்களோ, படியாதவர்களோ, புரிந்தவர்களோ, புரியாதவர்களோ, மற்றும் "உம் ஒலி கேட்கும்" அனைத்து "ஜீவர்களுக்கும்" அதன் ரஸாம்ஸத்தை, (ஊசி மருந்து) போல் செலுத்தி, கலி தோஷ வியாதியைப் போக்கியும், அளித்து வரும்,



"ஸத்ய(க்ருதா)யுகத்திற்கு" வந்திருக்கிறாய் போலும்? "உன்" ரூபமாக "ஸம்" பணி, தொடர்ந்து நடைபெற யாம் ஆசி வழங்கியிருக்கிறோம், என சொல்லி முடித்தார், ரிபு முனிவர்.

ஹம்ஸ்தேவ்:- ஏன் பாபா! கீதை என 18 உண்டு. அதிலிருந்த ரிபு கீதை என்ன, அத்தனை சிறப்புவாய்ந்ததா?

பைத்தியம்:- எம்பிரபுவே! ஹம்ஸ்தேவ் அவர்களே! வேதாந்தத்தின் உட்பொருளாகவும்; "கலப்பு" எதுவும் இல்லாததாயும்; "சுத்த அத்வைதமாயும்"! அமைந்த நூல்கள், இரண்டென ஸ்ரீ மஹான்களின் அனுபவமாகும்! ஒன்று ஸ்ரீமத் "ரிபு கீதை"! மற்றொன்று, "அஷ்டவக்ர கீதை"! என, ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள். இதை குருரூபமாக உணர்ந்து, "அது நாம்". "நாமே அது"! என ஆகிவிட்டால், அதுவே ஜீவன் முக்தியாகும். வேறு எதை கற்றாலும், பெற்றாலும், ஜனன மரணம் உண்டு.



ரிபு:- இது ஸத்திய வசனம் ஹம்ஸதேவி. மேலும், முடிந்தமுடிவாக ரிபுகீதை உணர்ந்து வருவது!!!???

சந்தேகம், கலக்கம், பயம் அற்ற இந்த நூல் உணர்ந்து, அது ஆகும் மாணவன், மிக, மிக, மிக, மிக, மிக, மிக, மிக "கடினம்"! அதைப் போல் இந்த நூல், "ஸ்வயஅநுபவ நிஷ்டியில்" போதித்து, ஸ்தாபிக்கும் ஸத்குருவும், மிக மிக மிக மிக மிக மிக மிக மிக "கடினம்"! மேலும் இந்த நூல் "சாமான்யர்கள்" (பக்குவப்படாத அஞ்ஞானிகள்) கைகளில் கிடைக்காது. இந்த நூலைப் பெற்று விட்டால் "அவர்கள்" "ஜீவன் முக்தர்களே!" இது ஸத்தியம்.

பிறந்து இறந்து! இறந்து பிறந்து! சம்ஸார சாகரத்தில் உழன்று, மலத்திலே புழுக்கும் புழுக்களைப் போன்று இன்ப துன்பங்களிலேயே, "சொர்க்கபோக மாக"! கருதும் இம்மானிடர்களிடையே, இந்த நூல் பிரகாசிக்க விடுவதான். பிரகாசிக்கவும் முடியாது!



**ஹம்ஸ்தேவ்:-** ஆமாம் எம் அருமை பாபாவே! சில காலத்திற்கு முன்பாக, யாமும் இந்த ரிபு கீதையை வாங்கி அதை சற்று உருவிப் பார்த்தோம். மிக மிக மிக, அருமையான நூல்தான். ஆனால் நீ உன் அன்பர்களுடன் பாடும் பாடல்களுக்கும், யாம் படித்த கேட்ட பாடல்களுக்கும், அனேக வித்தியாசம் இருக்கிறதே காரணம் என்ன?

**வைத்தியம்:-** உண்மை தான் மஹாராஜ்! நீங்கள் பார்த்த, கேட்ட ரிபு கீதை 44 அத்தியாயங்கள் கொண்டதாகும். பாடல்களும் கிட்டத்தட்ட, **2000** பாடல்கள் (உதாரணம் தான்) கொண்டதாகும்.

**ஹம்ஸ்தேவ்:-** உம் பாடல் வெகுவாக குறைந்திருக்கிறது. அதையும் யாம் அறிவோம். உம் பாடல்கள் மொத்தமே, **140** பாடல்கள் தான் வருகிறது. அதையும் யாம் அறிவோம். நீ பாடும் பாடலையும் கேட்டிருக்கிறோம். கேட்டும் செய்கிறோம். ஆனால் சில "**மாற்றங்கள்!**" தோன்றுகிறதே, அதன் காரணம் என்ன?

**வைத்தியம்:-** நீங்கள் மாற்றம் என குறிப்பிடுவது,
"**பாடலா? கருத்தா?**"

**ஹம்ஸ்தேவ்:-** உம் கருத்து வெகு அற்புதம்! வெகு அபாரம் அந்த 2000 ஐயும், நவரத்தினமாக, மணிமணியாக, பொறுக்கி பொறுக்கி வைத்திருக்கிறீர். பாடல் கேட்கும் போதே,



அதன் "ரஸாஸ்வம்" அப்படியே உள்ளே சென்று பாடுகிறது. இக்கவியில் இப்படி நீர், "உணர்ந்து" அதை "உணர்த்துவது" எவராலும் இயலாது தான். அதையும் யாம் ஒப்புக் கொள்கிறோம். மேலும் உம்மிடமும், உம் அன்பர்கள் அனேகரிடமும், நான், என்னை, என்னுடையது "வெகுவாக" அழிந்திருக்கிறது. ஆனல் "முழுமையாக அனைவரிடமும் அழியவில்லை"! அடி ஆழ உள்ளத்தில் தேங்கி இருந்து கொண்டு, அப்போதைக்கப் போது "தோன்றுகிறது"! அதையும் யாம் அறிவோம். ஆகவே அனைத்துப் பாடல்களிலும் "நான்" என்பது மாறி "நாம்" என ஆக்கி விட்டீர். நான் நாமாகவும் என்னுடையது, எம்முடையது ஆகவும், என்னை, யாமாகவும் மாற்றி இருக்கிறீர், அதுவும் வெகு பொருத்தமே.



ஆனால் "பரமசிவன்" என்பதை "பரசிவம்" என்றும்; "சிவன்" என்பதை "சிவம்" என்றும்; இறை சொரூபத்தையே மாற்றக் காரணம் என்ன? பரமசிவனே சிவபெருமானே இல்லை யென்பது உம் கருத்தா?

வைத்தியம் :- ஐயா தேவாதி தேவனே, மகாத்மாவே, மகத் சொரூபமாகிய "ஹம்ஸ்தேவ்" அவர்களே, உம்மிடமே பிள்ளை விளையாட்டா? அறிந்தும் அறியாதவர் போல் இக் கேள்வியா? இவ் வேழையாகிய வைத்தியம், "உம்மிடம்" படித்த பாடம் தானே?

ஹம்ஸ்தேவ் :- ஓ பாபா, ஓ பாபா, ஓ பாபா, உம்மை பரீக்ஷிக்க யாம் யார்? "நீயோ பரம்", அம்பம். ஆனால் யாமோ, தெய்வ அம்சத்தோடு "யோகஸித்தபுருஷ", அம்பம்! அப்படியே யாம் தெரிந்திருந்தாலும், உன் வாக்கால் யாம் கேட்கும் போது, எப்படி இருக்கிறது தெரியுமா?



உ

"சிவபெருமான்"/ அவர் ஞானக் குழந்தையான, பழம் நீ என்னும், "அழகு முருகனிடம்"| ஞானபாடம் கேட்ட சிறப்பு அம்சமாகும்! நீயோ எம்முடைய "சேய்"! யாமோ உன் அன்புத் "தந்தை"/ தானே? தயங்காமல் உன்மழலை மொழியில் சொல்வாயாக.

ரிபு :- குழந்தாய் பாபா! ஏன் தயக்கம்? உன் அன்புத் தந்தை பரமஹம்ஸர் இருக்கிறார். உன் அன்புத் தாத்தா கோதாபுரி இருக்கிறார். உன் கொள்ளுத் தாத்தாவாகிய யாம் இருக்கிறோம். உன் "சிறப்புத்தந்தை" யாகிய "ஹம்ஸதேவ்"| முன்றல், ஸத்தியத்தை உரைக்க ஏன் இந்த தயக்கம்? முன்பொருசமயம், இயமபுரியில் திரிகர்த்தாக்களின் முன்னிலையில், (பிரம்மா, விஷ்ணு, சிவன்) சொன்ன ஸத்திய வாசகம், இன்றும் தேவ சபையிலும், மற்றும் ஸ்ரீமஹான்கள் "ஸத்ஸங்கங்களிலும்



உ

"பிரமாணமாகப் பேசப் படுகிறதே. அதையாமே உரைக்கிறோம். அனைவரும் கேண்மின்.
அன்று சொன்ன ஸத்திய வாசகத்தை எம் ரிபு முனிவன் சொன்னான். அதாவது ஸத்திய வாசகம்!

"பாபா": — நாமரூபமாக, விராட்ரூபமாக தோன்றி நிற்கும், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும், (பாபாவிடம் கேட்ட கேள்வி) "நாங்கள்" "இல்லையென்றால்", "நீ ஏது?" "உனக்கு இருப்பு ஏது??"

அதற்கு பாபா சொன்ன பதில்.
அமர்ந்த நிலையில், எக்குணமும் இன்றி, நிர்க்குணமாய்,
"பிரம்மானந்த சமுத்திரம் ஆகிய", "எம்மை தோன்றிய" "உம்பிதாமகளே!!!"



"யாம் அன்றில் நீங்களுண்டு?"
ஆமோ?
"நீங்கள் இன்றில் யாம் உண்டு"!
எம்மையன்றி நாங்கள் வேறு???
"எல்லாம் (நாம் அனைவரும்) ஒன்றே"!

என முடித்தோம். எல்லாம் ஒன்றே ஆனது.

நாங்கள் அனைவரும் "அதை"! வணங்கினோம்.

வைத்தியம் :- ஹே மஹாத்மாக்களே! உங்கள் அனைவரின் திருவடித்தாமரையையும், எம் சென்னி சூடிக் கொண்டு ஓர் ஸ்பீக்கர் ஒலிக்கிறது :- சிவன் என்றால் அது கைலாசபதி! சிவம் என்றால் அது பரசொரூபம்!
நாராயணன் என்றால் அது வைகுண்டபதி!
நாராயணம் என்றால் அது பரசொரூபம்!
பிரம்மன் என்றால் அது பிரம்மலோகாதிபதி!
பிரம்மம் என்றால் அது பரசொரூபம்!
என ஸ்ரீ மஹான்களின் அனுபவ வாசகமாகும். இங்கு ஸ்ரீமத் ரிபு கீதை சுத்த அத்வைத பரசொரூபநூலாக இருப்பதால், சிவன் என்பதை சிவம் என்றும், பரசிவம் என்றும் மாற்றினோம்.



உ

நீங்கள் அனைவருமே, நாம ரூப குணம் குறி கடந்த அந்த காலாதீத ஒன்றே!

ஆனால் இவ்வுலகம் விவகாரசத்தியமாக இருப்பதால், நாம ரூப குணங்களோடு "சற்றுவிளையாடிக்!" கொண்டிருக்கிறோம். சித்திரா பௌர்ணமி என்றும், நாம் இங்கு கூடியிருப்பதும், வாக்கால் விவரிப்பதும் "நாடகமே!" அதன் விளையாட்டாகும்.

ஹம்ஸ் தேவி :- எம் செல்வமே பாபா! ஓர் சிறிய கேள்வி. இந்த ஸ்ரீ கீதையின் ஆசிரியர், பிச்சு சாஸ்திரிகள், என அஷ்டாவதானியாக அறிகிறோம். அவரும் அத்வைத ஞானம் இல்லாமல், சமஸ்கிருத வாக்கியங்களை, இத்தனை எளிதாக தமிழாக்கம் செய்திருக்க மாட்டார், எனவும் உணர்கிறோம். அப்படிப்பட்ட ஓர் மஹாத்மா, நான் என்றால், என்னுடையதை, விடாமல் இருக்க முடியாது. சிவன் – சிவம்! இவைகளுக்கும், விளக்கம் தெரியாமலும் இருக்க முடியாது. அப்படியானால் அவர் இந்த தவறை செய்திருப்பார் என, எண்ணுகிறீர்களா? மேலும் ஓர் கேள்வி தோன்றுகிறது? அதாவது,



உ

பிரம்மா, விஷ்ணு, சிவன் இல்லை
யென்ற நிலையில், அனேக பாடல்கள்
வருவதால் அது.
"தெய்வநிந்தனை" ஆக
கருதப்பட்டு, இதனை கூறிய ஆசிரியருக்கு நேத்திரம்
குருடானதாகவும், பின் மனம் வருந்தி இறைஸ்துதி
யாக "வேறு" என்ற ஓர் பாடல், ஒவ்வொரு
அத்தியாயத்திலும் சேர்த்ததாகவும், அதனால்
தெய்வ அபசாரம் நீங்கி, அவருக்கு பார்வை
வந்ததாகவும் சொல்லப்படுகிறது. இதுபற்றி உம்
அபிப்பிராயம் என்ன? இவ்விரு கேள்விகளுக்கும்,
விடை தெரிய வேண்டுகிறேன்!

வைத்தியம் :- ஓம் ஹம்ஸா! ஹம்ஸ் தேவ் அவர்களே!
முதல் கேள்வியின் விடை :- நாங்கள் கூறிய படி,
பிச்சு சாஸ்திரிகள், பூரண அத்வைத ஞானம் உடையவரே.
இல்லையானால் ஓர் சமஸ்கிருத நூலை, எட்டு வரிகளில்
(சிவசமஸ்கிருத வாசகம் கலந்திருந்தாலும்) எளிய
"தமிழில்" ஒருமுறை படிக்கும் போதே புரியும்
நிலையில், உணர்வாக உணர்த்தி இருக்கிறார் என்றால்?



அவர் ஓர் "மஹாஞானி" யே!

ஆனால்? ஒரு சில பண்டிதர்களும் அங்கு இருக்கலாம் அல்லவா?

ஹம்ஸ் தேவ் :- அவஸ்யம் இருக்கலாம்.

வைத்தியம் :- மஹா மேதையான பண்டிதர்கள், ஓர் ஞானியின் வாசகத்தை ஏற்கமாட்டார்களே!

ஹம்ஸ் தேவ் :- அதென்ன அப்படி சொல்கிறீர் பாபா? பண்டிதர்கள் என்றுமே சாஸ்திர ஞானம் உள்ளவர்கள் தானே? அவர்கள் அதை எப்படி ஏற்கமாட்டார்கள்?

வைத்தியம் :- ஓ மஹாத்மா! எம்மையே திரும்பவும் பரிசோதிக்கிறீர்களா? சாஸ்திரஞானம் வேறு! அனுபவஞானம் வேறு! ஏட்டுச் சுரைக்காய் சமையலுக்கு ஆகுமோ???

(ஹம்ஸ்தேவ் அதிசயமாக சிரித்துவிட்டார்) பின் அவரே சொன்னார் :- ஆமாம் பாபா! உண்மையே புகன்றீர், அப்படியானால் பண்டிதர்கள் மாறியிருக்கலாம் என சொல்கிறீர். அதிகம் படித்தாலே பிரச்சனைதான். தானும் கடைத்தேற மாட்டான். பிறரையும் கடைத்தேற விடமாட்டான். இதை எம் அனுபவத்திலேயே எம் மாணவர்களிடமே கண்டிருக்கிறோம். ஸத்தியம்தான்.



உ

மைத்தியம்:- ஓ மஹாத்மா ஹம்ஸ்தேவ் அவர்களே! ஓர் ரகஸ்யமான வார்த்தையும் சொல்லுவார்கள்.

ஹம்ஸ்தேவ்:- அது என்ன வார்த்தை?

மைத்தியம்:- "வித்துவான் கத்துவான்!" அதாவது வேத சாஸ்திரம் அதிகம் படித்துவிட்டாலே, பிடிவாதமும், குதர்க்கமும், அவர்களைவிட்டு சாமான்யமாக நீங்காது என்பர். எதையும் சாமான்யமாக பண்டிதர்கள் ஏற்கமாட்டார்கள். இந்தப்படி இந்த ஞானி, சொல்வதை அந்த பண்டிதன் ஏற்காததால், வந்ததே இந்த விபரீதம். இருப்பவர்களும் வேத சாஸ்திரம் படித்தவனை, பண்டிதன் என்றும், அனுபவ ஞானமுள்ளவனை, பாமரன் என மதிப்பதுதானே, இன்றைய கலியுகவிதி. அதை எவரும் மாற்றவோ மறுக்கவோ, முடியாதுதான்.

இரண்டாவது கேள்வியின் விடை:- பிரம்மா, விஷ்ணு, சிவன் என சொல்லி அவர்களை இல்லையெனச் சொல்வது "நாமரூபத்தோடு" இல்லையென்பதே ஸத்தியம். அம்மூவரும் "பரசொரூபமாக" இருக்கிறார்கள் என்பதே ஸத்தியமாகும். இதை அறிவு உணர்ந்து கவனிக்க வேண்டும்.



உ

அனுபவ ஞானத்தில் "மண்!" பரமாகவும்; "பொன்!" இறைசொரூபமாகவும்; "ஆபரணம்!" நாமரூப ஜகசொரூபமாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் இங்கு, தாங்களுடைய விளக்கத்திற்காக மட்டும், "பரம், பொன்!" என்றும்; திரிகர்த்தாக்களும் "நாமரூபம்!" தாங்கிய "ஆபரணம்!" என்றும் வைத்துக் கொண்டால்? "பொன்னுக்கு ஆபரணம்!" வேறா??? இரண்டும் ஒன்றுதானே? பஞ்சு வேறு வஸ்திரம் வேறா? இரும்பு வேறு ஆயுதம் வேறா? உப்புப் பதுமை வேறு சமுத்திரம் வேறா? ஆகவே கர்த்தாக்கள் ஆபரணமாக இல்லை. அவர்கள் பொன்னாக இருக்கிறார்கள் என்றால், அது அபசாரமா? தெய்வ நிந்தனையா? ஆகவே "பக்தி!" வேண்டும் என்பதற்காக, அப்படி ஓர் பயமுறுத்தல் கற்பனையாக சொல்லி வைத்தார்கள், அனுபவஸ்ரீமஹான்கள்.



உ

மேலும் வேறு என்ற பாடல், ஒவ்வொன்றிலும், உணர்வோடு உணர்ந்தால் அப்பாடல் முடிவில்?

"அகண்ட சிவம்" என வருகிற அடியாலும், இடையில் வரும் பாடலில், "பரசிவம்" என வருவதாலும்,

"கண்டம்" என்றால், அளவுக்கு உட்பட்டதென்றும்,

"அகண்டம்" என்றால் அளவுக்கு அப்பாற்பட்டதென்றும்,

பொருள் கொள்ள வேண்டும். மேலும்?

"பரசிவம்" என குறிப்பிடுவது பர சொரூபத்தை குறிப்பிடுவதாகும். அளவுக்கு உட்பட்ட ஓர் மூர்த்தியை" இப்பாடல்கள் எதிலும் குறிப்பிடப்படவில்லை யென்பதே, முக்கிய கருத்தாகும்.

மேலும் ஸ்ரீ மஹான்களின் அத்வைத உணர்வின் கருத்தும் வேதாந்த முடிவின் கருத்தும், "முடிந்த முடிவாகவும்" பிரமாணமான வாசகமாவது:-



உ

காலாதீத பர சொரூபமே, தம்மைத் தாமே தோற்றுவித்துக் கொண்டு அனைத்து அண்டங்களையும், அனைத்து ஜீவ கோடிகளையும், ஜடசடபடாதிகளாகவும் "பரந்து விரிந்து," "அனைத்தும் தாமே ஆனதால்" அப்பரமாகிய "ஆத்மாவுக்கு," அன்னியம் எதுவும் இல்லை.

"ஜகத் ஜீவ ஈஸ்வராதி"களாக நம் ஆத்மாவே, வியாபகமாக இருப்பதால் எதையும் வேணும் என்று கொள்ளவோ, எதையும் வேணாம் என்று தள்ளவோ, முடியாத்தன்மையினால், அனைத்து ஜீவ கோடிகளுக்கும், அனைத்து தேவ தெய்வங்களுக்கும், நாமே "ஆத்மாவாக" இருக்கிறோம் என்பதே, பிரத்தியட்ச உண்மை. ஆகவே இங்கு, அபசாரமோ, அனாச்சாரமோ, அபம்யாவிதமோ, தெய்வ நிந்தனையோ, இல்லவே இல்லையென, அதுவே நாம்; நாமே அது என கருங்கல்லைப் போல,



உ

அசைவற்றிருப்பதே, பூரண ஞானமாகும்!

ஹம்ஸ தேவி :— ஹே பரிபூரண பாபாவே! உன் விளக்கம் அதி அபூர்வம். ஆனாலும் ஸ்வய அனுபவமான தே. மேலும் ஓர் சிறிய கேள்வியை, கேட்டு விட்டு யாம் நிறைவடைகிறோம்.

குழந்தாய் பாபா! ஸ்ரீமத் ரிபு கீதையின் பாடல்களே, நீ எடுத்தெழுதிய பாடல்களாகும். ஆனால் சில வரிகளை, அனுபவ நிலையில் மாற்றி அமைத்திருக்கிறாய். அதுவும் பரவாயில்லை. ஆனால் "ரிபு கீதை" என்பதை அப்படியே மாற்றி "ஸ்வயஞான அனுபவம்" என மாற்றக் காரணம் என்ன? உங்கள் உலக (பூலோக) நிலையில், இதை எவரும் கேட்க மாட்டார்களா? (முன் பின் உள்ளவர்கள்) இதோ இக்கீதையின் நாயகனை, மஹாத்மாவாகிய "ஸ்ரீ ரிபு முனிவரே" நம்முடன் இருக்கிறார். இவர் ஏதும் கேட்க மாட்டார், என்ற துணிச்சலா?

வைத்தியம் :— ஓம் யோகீஸ்வர ஹம்ஸ தேவி மஹாராஜ்! பூலோக நிலையில் எவரும் கேட்க முடியாத அளவுக்கு,

1. பாடல்களை பிரித்தெடுத்தது.
2. அனேக பாடல்களையும் வரிகளையும் மாற்றி அமைத்ததும்.



ஆகிய இவ்விரண்டினையும், எவரும் கேட்கவும் முடியாது. அதை மறுக்கவும் முடியாது. அதை மாற்றவும் முடியாது. படிப்பவர் எவரும் எதையும் தள்ளவும் முடியாது. இதை தொட்டு சுற்று "உள்ஆழ்ந்துவிட்டோம்!" இது அவர்களை விடாது. அவர்களை இது சாப்பிட்டுவிடும். அதாவது இவர்கள் அறியாமையை அகற்றி, அவர்களை தாமாக்கி விடும்!

பெயர் மாற்றம் பற்றி கேட்டீர்கள்?

"ஸ்வயஞானுபவம்!" என்ற நாமாவை, சூட்டியதே எம்பிரபு ரிபு முனிவர் தான். இந்த நாமாவானது, பழம் பெரும் ஞானியான இந்த எம் "ஸ்ரீ ரிபு முனிவரும்!" "எம் ஸத்குரு தேவரான, "ஸ்ரீ வேதவியாச பகவானும்!" எமதய்யனும், எம் அம்மனும், கபடநாடக சூத்திர தாரியான பக்காத் திருடனை, "கண்ணனும்!" இணைந்து வைத்த நாமம். எனவே பேசிக் கொண்டிருக்கும் போதே,



உ

என்ன இங்கு திருடன், கண்ணன், என்று
எம் நாமா விமர்சிக்கப்படுகிறதே?
ஏதேனும் விஷேசம் உண்டோ???
என கேட்டுக் கொண்டே எமதய்யன்
(திருடன்) கண்ணன் அங்கு பிரத்தியக்ஷ
மானான். அவன் வரும் நிலையில், எந்த ஒளிவட்டமும்
தோன்றுது. எந்த அறிகுறியும் தோற்றுது. இது சகஜம்.
"திடீர்" யென வருவான். "திடீர்" யெனமறைவான்.

பரமஹம்ஸர் :- ஹே கண்ணா! நீ வந்ததே ஒர் விஷேசம்
தானே? ஆனால் நீ ஒர் ஒர வஞ்சகன் தானே?

கண்ணன் :- ஓ பரமஹம்ஸ தேவரா! ஜடாதாரி என்ற
ஒர் மஹானிடம், வெகுகாலமாக பிணைக்கப்பட்ட, எம்மை
ஒரு நொடியில் கவர்ந்து, இழுத்துக் கொண்டீரே! அதை
எப்படி மறக்க முடியும். எம்மைப் பார்த்து, வஞ்சகன்
கண்ணன் என தாராளமாக சொல்லி விட்டீர். உண்மையிலேயே
எம்மிடம், "கள்ளம், கபடம், சூது"!
ஆகிய இம்மூன்றும் உண்டு தான். ஆனால் அதை எல்லோரிடமும்
பயன்படுத்தோம். பயன்படுத்தவும் முடியாது. முள்ளை
முள்ளால் எடுப்பது போல், மேலே கூறிய மூன்றும் எங்கு
உள்ளதோ, அங்கு இம்மூன்றையும் நிலை கண்டு,
பயன்படுத்தி, அதை எடுத்து தூர எறிந்து விட்டு, எதை
வைத்து எதை எடுத்தோமோ, அதையும் தூர எறிந்து விடுவோம்.



பரமஹம்ஸர்:– ஹே பிரபோ! ஹே பரமாத்மா! யாம் கூற வந்தது ஒன்று, ஆனால் நீ கூறியது ஒன்றும் ஆனாலும் உன் வாக்கின் அர்த்தபாவனைகள், அனைத்துமே ஸத்தியமே. ஆனால் இக் கலியில் நீ கூறிய ஒன்றுமே, நல்விரித்தாருகிறது இப்போதுள்ள சூழ்நிலையால், நீ மட்டுமே இந்த பாமரனுடன் (பாமரர்) இல்லையானால், இவன்பாடு தகிடுதத்தம் தான்!

கண்ணன்:– ஹே ஹம்ஸ தேவரே! உம் வாக்கு ஸத்தியமே! ஆனாலும் சற்று மாற்றி சொல்லிவிட்டீர். எப்படி என்றால், இப்பாமரனிடம் யாம் அகப்பட்டுக்கொண்ட தன்மையினால், எம்பாடு தகிடுதத்தம் தான். (சொல்லிவிட்டு கடகடவென சிரித்தான்)

ஆமாம் ஹம்ஸ தேவா! எம்மை ஒர வஞ்சகன் என சொன்னீரே, அதன் பொருளை, தெரிந்து கொள்ளலாமா?

பரமஹம்ஸர்:– இந்த தாசி பாமரனிடம், இருக்கும் பாசநேசம் வேறு எவரிடமும், இருப்பதாக தெரியவில்லையே, அதனால்தான் அவ்வாறு சொன்னேன்!

கண்ணன்:– நீர் சொல்லும் பாசநேசம், பாமர காட்டுகிறாரா? யாம் காட்டுகிறோமா?

பரமஹம்ஸர்:– இந்த பாமரனிடம்தான் ஒன்றுமே இல்லையே! நீதானே பாசநேசம் காட்டுகிறாய்?



உ

கண்ணன் :— கடகடகடவென சிரித்துக் கொண்டே, எம் ஹம்ஸ தேவா! நீர் ஸத்தியமே புகன்றீர். இப்பாபாவிடம் "ஒன்றும் இல்லை தானே?" அதுதானே எம் இடம்?

மற்றும் நீரும் அனைவரும், ஏதேனும் ஒன்றை விடாமல் வைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஏதேனும் ஒன்று அங்கு இருந்தால், அங்கு "எமக்கு இடம் ஏது?"

பரமஹம்ஸர் :— ஒரு வார்த்தைக்குத்தான், அவ்விதம் யாம் கேட்டோம். ஆனாலும் பாபாவுக்கு இணை பாபா தான். இப்படியே இன்னும் இரண்டு வார்த்தை சொன்னால், நம் "பாபா", "பாப்பா தான்!" அதாவது கரைந்து உருகி மறைந்து மயமாகி விடுவார். அது சரி என்ன கண்ணா திடீர் விஜயம்?

கண்ணன் :— யாம் விஜயம் செய்திருக்கிறோமா? அதுதான் இல்லை. இதோ இந்த மூன்று மஹாத்துக்கள் தான், (ஹம்ஸ்தேவ் ஜீ, தோடகாபுரி ஜீ, மஹரிஷி ரிபு,) இங்கு விஜயம் செய்து, வைகுண்டம், கைலாயம், பிரம்மலோகம், சொர்க்க லோகம், ஆகிய நான்கினையும், சித்ரா பௌர்ணமியை, அமர்க்களப் படுத்தி விட்டார்களே! அதனால்தான் இங்கு வந்து, அனைவரையும் தரிசித்துப் போகவே வந்தோம்.



உ

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல், இங்கு வந்த இடத்தில்,

"எம்மை முழுமையாக" "உணர்ந்த தெய்வங்களான",

எம்பரமஹம்ஸ தேவனும், அவன் ஸத்புத்திரனை பாபாவும் இணைந்த நிலையில் காட்சி கொடுக்கும் போது,

"யாம் பெறும் பேறு!" வேறென்ன இருக்கிறது?

இதைச் சொல்லும் போது, எம்பிரபு கண்களில் கண்ணீர் பனித்து நின்றது! உடனே எம்பரமஹம்ஸர், தம் மேல் வஸ்திரத்தால், அதை கீழே விழுந்து விடாமல் துடைத்துக் கொண்டே, ஹே கமலக்கண்ணா! உன் கண்ணீர் பூமியில் விழலாகாது. அது விழுந்தால் அழித்து ஜீவர்களுக்கே ஆகாது என, ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள்.

எங்கள் மூவருடைய இந்நிகழ்ச்சியையும் அம்மஹான்கள் மூவரும், சித்திரம் போல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். (பார்க்க வைத்து விட்டான் எம்பிரபு கண்ணன்) அவன் கருணையால், அனைவரும் ஓர் நிலைக்கு வந்து விட்டார்கள். அம் மூவரும் எம்பிரபுவை, நமஸ்கரித்தனர். பின்னர் எம் ஹம்ஸ் தேவ் பேச்சை ஆரம்பித்தார்.



உ

ஹம்ஸ் தேவ்:— ஹே மாயவா! மதுசூதனா! உன்னிடம் சில கேள்விகள் கேட்க வேண்டும் கேட்கலாமா?

கண்ணன்:— உங்கள் இருவர் (ஹம்ஸ் தேவ் & தோதாபுரி) பொருட்டே தானே, யாம் வந்தோம். என்ன விளக்கமோ?

ஹம்ஸ் தேவ்:— இந்த பரமஹம்ஸரும், இந்த பாபாவும், "தியாக வழியில்!" (சர்வசங்க பரித்தியாகத்தின் முறையில்) வந்தவர்கள். ஆனால் இந்த ரிபு மஹரிஷி வழி தனிவழி! நாங்கள் இருவரும், (ஹம்ஸ் தேவ் & தோதாபுரி) "யோகவழியில் தனிவழி!" இதில் எது சிறந்தது என சொல்ல முடியுமா? ஏன் என்றால் நீ இந்த கலியுகத்திற்காகவே, துவாபர யுக கடைசியில், தோன்றிய அவதாரபுருஷன். மற்றைய மூன்று யுகங்களிலும், கர்ம தர்மங்கள் சாதகமான நிலையில், அமைந்திருந்தது. ஆனால் இக்கலியில், கர்ம தர்மங்கள் இல்லாமல் மறைந்து, புண்ணியபாபம் என பிறவிப் பிணிக்குரிய, கர்மாக்கள் பெருகிவிட்டன. எது இக்கலியுக மக்களுக்கு, சாதகமாய் அமையும் என தயைசெய்து, விளக்கி அருள வேண்டும்?



உ

கர்ம தர்மங்கள்:— பயன் கருதாது செய்தலும், நிஷ்காமியமாக ஸ்ரீ பகவத் அர்ப்பணமாக செய்வதும், தானம் போக மீதி இருந்தால், அதை ஸ்ரீ பகவத் பிரசாதமாக ஏற்றலும், எந்த நிலையிலும் ஸ்ரீ பகவத் சிந்தையோடு இருத்தலும், "கர்மாவை தர்மமாக" மாற்றி, பிறவா நிலையாகிய ஜீவன் முக்தி நிலையாகும்.

புண்ணிய பாபங்கள்:— நான், என்றல், என்னுடையது என்ற அஹங்கார, அதிகார, அபிமானங்கள், புடைசூழ கர்மாவின் பலனை அபேக்ஷித்து (விரும்பி) அதிலும் இன்பம் வேண்டுமென்றும், துன்பம் வேண்டாம் என்றும் விருப்பு வெறுப்போடு, பேத பார்வையுடன், குறைகளை கண்டுகொண்டு, கண்டிப்பும் தண்டிப்பும் கொண்டு, சுயநலமாக (ஸ்வய நலமாய்) செய்து அக்கர்மா புண்ணிய பாபமாக மாறி, பிறப்பிறப்பென்றும், "ஜனன மரணங்களை" கொடுப்பதாய் முடிவதே புண்ணிய பாபமாகும்!

"கண்ணன்" வாசகம்!

யோகம் என்றால் கட்டுதல். அதாவது பிராணனை கும்பகம் பண்ணி (அடக்கி ஆண்டு) அவ் அடக்குதலால், மனம் அடங்கி (அழியவில்லை) ஆசைகளும் அடங்கி ஒடுங்குதலும் ஆகும். (இங்கே ஆசை அழியவில்லை)



உ

தியாகம் என்றால் நாமரூபமுள்ள ஓர் இறைவனிடம், எல்லாம் நீயே என சரண் புகுந்து, விருப்பு வெறுப்பு கொள்ளாமல், பேதம் காணாமல், குற்றம் குறை காணாமல், எல்லாம் இறைவன் பொருளே என்றும், எல்லாம் இறைவன் செயலே என்றும், அணுவும் அசையாது, அவனன்றி, என்ற உணர்வோடு இருந்தால் **மனம்** இறைவன் திருவடியில் கலந்து, கரைந்து தன்மையில், மனம் **"மறைந்தால்"**, தன்மையினால் **"ஆசைகள்"** அடங்காமல் அழியும் நிலை பெறுவதே, தியாகம் என்பதாகும்.

மேலும்? (ஞானி = தியாகி)

யோகிகளுக்கு சக்தி பெருகும்!

ஞானிகளுக்கு சக்தி தன்னுள் அடங்கும்!

யோகிகளுக்கு நான் மிகுதியாக இருக்கும்!

ஞானிகளுக்கு நான் அறவே இராது!

யோகி காற்றையும் தன் சக்தியையும் நம்புவான்!

ஞானி நாமரூபமுள்ள ஓர் இறைவனை நம்புவான்!



யோகிக்கு சக்தி வெளிப்பாடாகும்.

ஞானிக்கு மாயை உள்அடங்கியிருக்கும்!

யோகி வாலிப பிராயம்!

ஞானி வயோதிக பருவம்!

யோகி சுய பலத்தால் நிற்க முடியும்!

ஞானி குரு பலத்தால் பிரகாசிக்க முடியும்!

யோகத்தால் அஷ்டசித்தி கைகூடும்!

ஞானத்தால் ஆத்ம சக்தி பூரணமாகும்!

யோகிக்கு நாம ரூப புகழ் உண்டாகும்!

ஞானிக்கு பிரம்மானந்தம் உண்டாகும்!

யோகி தம் சிஷ்யனை அடக்கி ஆள்வான்!

ஞானி தம் சிஷ்யனை தமக்கு சமமாக்குவான்!

யோகிக்கு சக்தியின் சுயபலம் உண்டு!

ஞானிக்கு ஸ்ரீபகவான் குருபலமும் உண்டு!



உ

இவைகளை கவனமாக கேட்டுக்கொண்டேவந்த ஹம்ஸ்தேவி மஹாராஜும், தோதாபுரி மஹாராஜும், யோகிக்கு "ஜீவன் முக்தி" உண்டா? இல்லையா எனக்கேட்டார்கள்?

கண்ணன்:- விசாரஞானம் இல்லாமல் "கர்மா தொலையாது"! கர்மா தொலையாமல் முக்தி இல்லை!

இருவரும்:- யோகிகளுக்கும் சித்தர்களுக்கும் விசாரஞானம் இல்லையானால், அவர்கள் முடிவு என்னவாகும்?

கண்ணன்:- அவர்களுக்கு "யோகானந்தம்"! அவஸ்யம் உண்டு. அதுஞானியின் பிரம்மானந்தத்தை ஒத்திருக்கும். ஆனால் பிரம்மானந்தம் ஆகாது!

இருவரும்:- அவர்களின் முடிவென்ன?



உ

கண்ணன் :— அவர்களின் முடிவு காலமாக சரீரம் அழிந்தால், ஓர் ஸூட்சும சரீரத்தோடு அவர்களுக்கு உரிய, யோகானந்தத்தோடு, "பலகாலம்" வாழலாம்.

பின்னர் எப்படியும், ஓர் "மனுஷ்ய ஜன்மா" எடுத்து ஓர் ஸத்குருவின் மூலமாக "விசாரஞானம்" பெற்றால் தான், ஜீவன் முக்தி பெற முடியும், என கண்ணன் அவன் உரையாடலை முடித்தான். பின்னர் தோதாபுரியும், ஹம்ஸ தேவியும், சில கேள்விகளை கேட்டனர். அதன் விவரம் பின் வருமாறு! → பாபாவிடம்

ஹம்ஸ தேவி :— ஓ எம் அருமை பாபாவே! உம்மை பற்றி அனைவரிடமும், விளக்கம் கேட்டதில், நீ "பழம் பெரும் ஸித்தாக"! தோற்றமளிக்கிறாய்! அதுவும் யாம் ஸ்தாபிதம் பண்ணிய, இந்த குகையில் உள்ள, "ஹம்ஸ ஷிகார்" ஆஸ்ரமத்திற்கு பல முறை வந்து இருந்து உன் மெய்யன்பர்களுடன், ஸத்ஸங்கம் நடத்தி "பிரம்ம தேஜஸ்"



உ

உண்டு பண்ணி, எம் யோகத்தின் "சக்தி தேஜஸையும்" இணைத்து வெகுவாக பிரகாசம் பெருக்கியதற்கு, நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

வைத்தியம்:— யாமா இக்காரியம் செய்கிறோம்? ஒருக்காலமும் இல்லவே இல்லை. நீங்கள் அனைவரும் "மஹாத்மாக்கள்" "மஹாத்மாக்கள்" யாம் ஓர் "தாஸிதானே?" ஆம் நிலையில் யாம் ஓர் "புதுமையானே" "யாம் ஐயக்கம்" அற்றவன் தானே?

ஹம்ஸ்தேவ்:— பணிவையும் அடக்கத்தையும், முழுவதும் விட்டு, "நான். என்றும்" "யாம். எம்மால்" என உயர்ந்துவிடுகிறோம். உண்மையில் இக்கலியில், எந்த மஹாத்மாக்களிடமும், இல்லவே இல்லை என்போம். உண்மையாகிய பணிவு, அடக்கம், சாதனையால் பெறுவதா? இயல்பாக வருவதா?



வைத்தியம் :- ஓ மஹாராஜ் ஹம்ஸ்தேவ் அவர்களே! "சாதனை" என்பதே ஓர் "பாரமே!" சாதனைபல செய்து மேலும் மேலும், பாரங்களை ஏற்றுக்கொண்டால் அப்பாரத்தை தூக்கிப்போட்டு நாசம் செய்வது எப்போது?

ஹம்ஸ் தேவ் :- அப்படியானால் பாரத்தை நாசம் செய்து நாம் சும்மா இருக்க, "ஓரேவழியென்ன?"

வைத்தியம் :- ஓரேவழி, நாமரூபமுள்ள ஓர் இறைவனிடம், "தியாகத்தால்" சர்வார்ப்பணம் செய்துவிட்டு, காண்பதிலும், கேட்பதிலும், பேசுவதிலும், வெகு ஜாக்ரதையாக இருந்து கொண்டு, அனைத்தும் அவன் பொருளே! அனைத்தும் அவன் செயலே! அவனன்றி அணுவும் அசையாது என்ற திடஉணர்வோடு மனதை அப்பாய விடாமல், கண் இருந்தும் குருடாய், காது இருந்தும் செவிடாய், வாய் இருந்தும் ஊமையாய், "பிராணனை அடக்காமல்!" நம்மட்டில் "நாம் மட்டும் அடங்கி!" சும்மா சுகமாக



"சாக்ஷி" பாவனையில் ஆனந்த பரனாய் இருப்பதுவே, சாதனையற்ற நிலை ஆகும்!

தோதாபுரி:- ஐயா மஹராஜ்! மிக மிக எளிய முறையில், வெகு வெகு சுருக்கமாக சொல்லிவிட்டாய். ஆனால் எம்குருநாதர் பரமஹம்சரும் நீயும் ஒன்றே! அவனும் அவ்வாறே சாதித்தான். நீயும் அவ்வாறே சாதித்து விட்டாய்! ஆனால் ஏனையோர் சாதிக்க முடியாமல் திண்டாடுகிறார்களே, அதன் காரணம் என்ன?

வைத்தியம்:- ஐயா மஹாத்மாக்களே! யோகபுருஷர்களே! இக்கலிகோரமானது, பெயர் வேண்டும்! புகழ் வேண்டும்! அதற்கு "பணம். பட்டம். பதவி" வேண்டும் என, "மோஹ" வலையில் சிக்கிக் கொண்டதால், எவராலும் முடியவில்லையென்றே சொல்லுவேன்! மேலே கூறியவைகளை வேண்டாம் என "நிஷ்காம்யமாக" எவன் தான் இருந்தானோ, அவன் பக்தனோ யோகியோ ஞானியோ அவனிடம் விசார ஞானமும் அவசியம் உண்டு. அவனே ஜீவன் முக்தனும் ஆவான் இது ஸத்தியம்.



உ

ஹம்ஸ் தேவ் :— ஆம் மெய்யான பாபாவே! நல்ல விளக்கமும் ஓர் "உறுதி"யான பதிலும் தந்தாய். உன்னை இன்று சந்தித்ததற்கு, யாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

வைத்தியம் :— ஹே ஹம்ஸ் தேவ் மஹராஜ்! ஓர் சிறிய கேள்வி? நம் ஆஸ்ரம அன்பர்கள் அனைவரும், ஒருவரை ஒருவர் சந்திக்கும் போதும், விடை பெறும் போதும்; "ஹரி ஹரி" என்ற மந்திர நாமா உச்சரிக்கப்படுகிறதே அதன் விளக்கம் ஏதேனும் உண்டா?

ஹம்ஸ் தேவ் :— இதன் விளக்கம் தெரிந்த உனக்கு, இது "தெய்வ நாம" ஸ்மரணை என்பது தெரியவில்லையா?

வைத்தியம் : (சிரித்துக் கொண்டே) ஓ இதுதானே?

ஹம்ஸ் தேவ் :— உன் வார்த்தையிலும், சிரிப்பிலும் ஏதோ மர்மம் இருப்பதாக யாம் உணர்கிறோம். அது என்ன என யாம் தெரிந்து கொள்ளலாமா?

வைத்தியம் : ஹே மஹாராஜ்! விளக்கம் வேறொன்றுமில்லை, "ஹரி" என்றால் "ஞானம்" என்றும் அறிவு என்றும் பொருள்படும். ஹர் எனச் சொல்லும் "ஹர(ண்)ம்" என்றால் "நாசம்" எனப் பொருள்படும். இவ்விரண்டும், இணையும் போது, அறிவு என்ற ஞானத்தோடு இணைந்தால், பிறவாநிலையாகிய, ஜீவன் முக்தி பெறலாம் எனப்பொருள்படும் என மஹான்கள் சொல்லுவார்கள். இதை வைத்தே, ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்! எனவும் சொல்வதுண்டு.



ஹம்ஸ் தேவ்:- இதில் ஸத்தியமான இத்தனை பொருள் இருக்கிறதே!
வைத்தியம்:- ஹேமமே! வாஸனையை குறிப்பிடுவது எதை?
ஹம்ஸ் தேவ்:- நல்ல ஆளப்பா நீ! வாஸனை யென்றால் ஆகார விஷயத்தில் பூண்டு, புளி, வெங்காயம், காயம், பட்டை, கிராம்பு, இவைகளின் வாசனையாகும், "**குணதோஷங்களை**" உண்டுபண்ணும் என்றும், அவைகளை தள்ளு என ஸ்ரீ மஹான்கள் சொல்ல கேள்வி. ஆகவே எம் ஆஸ்ரமத்தில், மேலே கூறியவைகளை, தொடவும் மாட்டார்கள். தொடவிடவும் மாட்டார்கள். உன் அன்பின் குடிலிலும், அவ்வாறுதானே அனுஷ்டிப்பாய்!
வைத்தியம்: (சிரித்துக்கொண்டே) அப்படியானால் உங்கள் வாக்குப்படி யாவும் செய்தால், "**இறைதரு நம்பிக்கை**"! இல்லையென்பது உறுதியாகிறதே!
ஹம்ஸ் தேவ்:- (சற்று கோபம் அடைந்தார்) என்ன சொல்கிறாய் பாப்பா? யாரிடம் பேசுகிறோமென மறந்து விட்டாயா? நம் முன் மஹான்கள் வாக்கியம் "**பொய்**"! என்கிறாயா? உனக்கு இப்படி குழம்பும் குழப்பும் "**புத்தி**"! எவ்வாறு வந்தது?



உ

ஹம்ஸ் தேவ்:- ஆகாரம் தானே "மனம்?" மனம் தானே "குணம்?" குணம் தானே "வினை?" வினை தானே "புண்ணிய பாபம்?" புண்ணிய பாபம் தானே "ஜனனமரணம்?" பின் எவ்வாறு அந்த "துர்வாஸனைகள்" நீக்க முடியும்? உணர்ந்து பார்?

மைத்ரியம்:- ஹே ப்ரபோ! ஹம்ஸ்தேவ் மஹாராஜ்! அவர்களே இந்த ஏழையை மன்னிக்கவும். உண்மையில் எமக்கு புத்தி இல்லை தான்! யாம் "புத்தி சாலியும்!" இல்லை தான்! ஓர் சிறிய விளக்கம் கேட்கிறேன். தயை செய்து கோபம் அடையாதீர்கள் என்றும் தாங்கள் பாதம் பற்றி வேண்டிக் கொள்கிறேன்.

ஹம்ஸ் தேவ்:- என்ன கேட்கப் போகிறாய்!

மைத்ரியம்:- சாதனையாளர்களாகிய நாம், ஆகாரம் ஏற்றுக் கொள்ளும் போது நீர் விடாவும் போது என்ன செய்கிறோம்? "ஈஸ்வரார்ப்பணம்!" என்றோ, "கிருஷ்ணார்ப்பணம்!" என்றோ



"ப்ரஹ்மார்ப்பணம்"
என்றே, சர்வார்ப்பணம் செய்துதானே
ஆகாரம் எடுத்துக் கொள்கிறோம்?
ஹம்ஸ் தேவ்:- ஆமாம், வாஸ்தவம்தான்.
இறைபர உணர்வோடுதான், ஆகாரம்
எடுத்துக் கொள்கிறோம். "பரமாகி
வைத்தியம்:- அப்படியானால் அந்த
யனை" சொரூபத்திற்கு, (அதுவும் சூட்சுமம்
வாஸனை யென்று குணமும் சூட்சுமம்) அவ்வாஸனையாகிய
"குணங்கள்" ஒற்க முடியவில்லையானால்,
அந்த சர்வார்ப்பணம் தேவையில்லையே? நன்றாக கவனி
யுங்கள் பிரபுவே! "மண்ணுல்" ஆன ஆகாரம்
மண்ணிலான உடலுக்கே. (மண்ணை அள்ளி அள்ளி
மண்ணில் போடுகிறோம்.) சூட்சுமமான இறைபரம்,
சூட்சுமமான வாஸனை குணங்களை, ஒற்றே ஆகவேண்டும்.
இப்படி சர்வார்ப்பணம் பண்ணுதல் உண்டானால், அவசியம்
அவ்வாஸனையால் "மனம்" அவசியம் கெடும்!
இறையோ, பரமோ, அவ்வாஸனையாகிய
குணங்களை இல்லாமல் செய்ய வில்லையானால், "ஒன்று
உண்டு" என சொல்வதில் அர்த்தமே இல்லாமல் போய்விடும்.



ஹம்ஸ்தேவ் மஹாத்மா முதலில், "இமைத்தார்!" பின் "சிரித்தார்!" பின் கலகல கல கல வென "சிரித்துவிட்டார்!" அந்த "உபாசகரை!" பைத்தியத்தை அப்படியே கட்டி அணைத்து, இருகத் தழுவி மாறி மாறி, முத்தமாரி பொழிந்து, "சுகம்" பெறுவாய். உன்னை "அண்டினோர்!" அனைவரும் நலமும் சுகமும் பெற்று, "அது" ஆவர் என ஆசிர்வதித்தார். மற்றும் அனைவரும் ஆனந்தம் பொங்க "ஜெயவிஜயீபவ!" என வாழ்த்தி அந்தர்த்யானம் ஆனீர்கள்! சித்ரா பௌர்ணமி பூர்த்தியானது. எல்லாம் ஒன்றே! அது சுகமே!

**பாபா.**

அது யாமே!
அது நீங்களே! இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!



"ருசிப்பு" கவனம் தேவை.

குழந்தைகளே! "ஆகாரம்"!

மிக மிக மிக மிக மிக முக்கியமாகும்.

"இறை குருநாமாவில்"!

முழு நம்பிக்கையும், வைராக்கியமும் வரும் வரை" ஆகாரம் உண்பதில் சர்வ ஜாக்ரதையாக இருங்கள். ஆகாரத்தில் ஒரு பகுதி "மௌனமாக" செயல்படுவதால், "துக்கங்களையும்"!

இறை குருநாமாவில் திட உணர்வு பெற்றுவிட்டால், என்ன ஆகுமோ? ஏது ஆகுமோ? என்ன செய்யுமோ? இதனால்தான் இப்படி ஆகிவிட்டதோ? என்ற சந்தேகம், தயக்கம், பயம், நீங்கிவிட்டால், எதை எப்படி உண்டாலும் பெரு நெருப்பில் விழும் சருகு போல், சாம்பல் என அனைத்தும் பஸ்பமாகி விடும். அதாவது மண்ணால் ஆன ஆகாரம், மண்ணான உடலோடு மண் ஆகிவிடும். சூக்ஷ்மமான வாஸனையின் குணங்கள், சூக்ஷ்மமான ஸ்ரீ பகவானிடம் கலந்து மயமாகி விடும். நீ அதுவாகவே இருப்பாய்!



"பயமே பலிதம்!" என்பதையும்
"வாக்கே வாழ்க்கை!" என்பதையும்
மனதில் கொண்டு "திடமனோ
வேகு!" அமைதியாக அடங்குங்கள்.

ஸ்வய ஞானுபவ நூலில் பன்னிரண்டாவது (12)
பாடலாவது:- எல்லாவும் அயலின்றி, எல்லாம் என்றும்,
ஏகப்பரப்பிரம்மமதாய் இருந்தபோதும்;
"கள்ளமுறும்" மனமுடையோர் பரசிவத்தின்
கருணையில்லாக் குற்றத்தால் வேறு வேறாய்,
(தம்) உள்ளமதில் உணர்ந்து மனோபவ துக்கத்தை,
உறுவதனால், முடீசு வெல்லாம் எவ்விதத்தும்,
தள்ளவொண்ணா பரமசிவம் கருணை பெற்றே,
நமது பவதுக்கத்தை தவிர்க்க வேண்டும்.
என பாடல் அமைந்திருக்கிறது.

இப்பாடலுக்கு எம் ரிபு முனிவன் தந்த விளக்கம்!

முதலில் கூறும் பரசிவத்தை "பரகருணை"யாகவும்.
இரண்டாவது கூறும் "இறைகருணை"
யாகவும் கொள்ள வேண்டுமென்பது அருள் கருத்தாகும்.
பரகருணை "மனதிற்கு" என்றும்.
இறைகருணை "தூலத்திற்கு" என்றும்
பொருள் கொள்ள வேண்டும்.



1. எல்லாம் ஒன்றே! அது சுகசொரூபமே! அது நாமே நாமே அது! என்ற திட உணர்வு பெற்றும் மனம் மறக்காத பரகருணை அருள செய்கிறதான பொருள் கொள்க.

2. உணவு, உடை, இருப்பிடம் இவை மூன்றும், வினை சம்பந்தத்தினால் தாவத்திலே இறை கருணையால் கிடைக்கிறது. இம்மூன்றையும் அகங்காரம், அதிகாரம், அபிமானம், இல்லாமல் எல்லாம் நீயே! எல்லாம் உன்றன்! எல்லாம் உன்னுடையதே! என மாற்றி அமைக்கப்பட்டால், மேலே கூறிய உணவு, உடை, இருப்பிடம், ஆகிய மூன்றின், குணதோஷ வினை சாராது அழியும். இவைகளை இப்படி இரண்டு நிலையிலும் பிரிந்து அனுபவம் பெறுக.

ஒன்று மனதிற்கு பாடம்! மற்றொன்று உடலுக்கு பாடம்!

மனை பக்குவத்தினால் ஜீவன் முக்தியாகும்!

தாவ பக்குவத்தில் வினை மேலும் சேராத தன்மையால், அது விதேக முக்தியாகும். மனம் எண்ணமற்ற தன்மையால், மறக்காதாகும்! தாவம் வினைகளை சர்வார்ப்பணம் செய்து, வினை அழிந்த தன்மையினால் இவ்விரண்டு நிலைகளுக்கும் திரும்ப ஓர் தாவம் ஏது!

"மனமே கேள்!

அனைத்தும் ஒன்றே! அது நவமே! பாடம்

அதுயாமே! அது நீங்களே! இது சத்தியம்!



(ஸத்திய வாக்கை)

ஸத்தியம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்"

# "ஸ்ரீராம் ஜெயராம், ஜெயஜெயராம்" ஓம்!

# "அகம்பிரம்மம் ஜெகம்பிரம்மம்";

# "அகமே எல்லாம்"!

# "ஜெகம்பரமும், ஜீவர்களும்";

# "ஏதும் இல்லை"!

பழி என்பது சொல்! பாபம் என்பது செயல்!
கோபம் பாபம் அறியாது! நாவை அடக்கு!
நீ உன்னுள் அடங்கினால் உலகம் உன்னுள் அடங்கும்!
நீ பிறரை அடக்கினால், உலகம் உன்னை அடக்கி ஒடுக்கிவிடும்!
இதமாகவும், மிதமாகவும், பேசினால் உன் நாவு நண்பனாகும்!
கடும், சுடும், கபடச் சொல், பேசினால், உன் நாவு உன் பகைவனாகும்!
முன்கை நீண்டால் முழங்கை நீளும்! இறைக்கும் கிணறு ஊறும்; மறந்த கிணறு நாறும்!



1

# "வாழ்ந்தாலும் தூற்றும்!" "தாழ்ந்தாலும் தூற்றும்!!"

எம் ஆனந்தக் குழந்தைகளே!

இந்த கோரமான கலியுகத்தில், "உலகோடு ஒத்து வாழ்தல்" என்பது, கடினமான காரியம் தான். ஆனாலும் நம் இறைவன் கருணா மூர்த்தி! அவனை நம்பி, அவனுக்காக, அவன் நாமஸ்மரணையுடன் வாழ்ந்தால், நமக்கென தனி இடம் உண்டு. ஆனாலும், நிலை கண்டு, இடம் அறிந்து, வினை அறிந்து, உணவு, உடை, இருப்பிடம், ஆகியவைகளை, ஏதோ ஓர் மனித வடிவில், அவஸ்யம் தருவான். தந்தே ஆக வேண்டும்.

## "தெய்வம் மனுஷ்யரூபம்!"

என்பது, அவன் வகையில், அவஸ்யம் பொருந்தும். காரணம்???

அனைத்தும் அவன் பொருளே! அனைத்தும் அவன் செயலே!

## "அவனன்றி அணுவும்" அசையாது!

## "நம்பினோர் கெடுவதில்லை!"

என்பது அன்றும், இன்றும், என்றும், ஸ்ரீ மஹான்களின் ஸத்திய அனுபவ வாசகமாக இருக்கிறது!



உ

ஊர், உலகம், உறவு, எப்படி இருந்தாலும், எப்படி வாழ்ந்தாலும், நீ மட்டும் "உன் மட்டில் **நாவு அடங்கி**" வாழ்ந்தால், இவ்வுலகம் (உறவுகள்) முதலில் உன்னை தன்வசம் இழுத்துப் பார்க்கும்.

அது உனக்கு ஓர் "**பலப்பரீட்சையாகும்**".

நீ இறை நாம ஸ்மரணையுடன், நீயே கதி யென, அவனை நம்பி விட்டால், அவ்வுலகையும் உறவையும் அவன் மாற்றி அமைக்க அவனுக்கு வல்லமை உண்டு. இது எம்முடைய ஸ்வய அனுபவம். எப்படி இருந்தவன் இப்படி ஆகி விட்டானே? என்று உன்னை தூற்றுபவரும் உண்டு! போற்றுபவரும் உண்டு.

காரணம், உன் வினையும், உன் மனமும், அவர்கள் அறியார். அதேபோல் அவர்கள், வினையும், மனமும், நீயும் அறியாய்.

அவர்களின் சொல்லையும், செயலையும், நீ தவறாக கொள்வதில் அர்த்தமே இல்லை! அதைப் போல், உன் சொல்லையும் செயலையும், அவர்களும் புரிந்து கொள்ள முடியாது தானே? அவர்களிடமும், உன்னிடமும் நடைபெறும் "**கர்மாவின்**" வினைகளை, உடனே முடிவு தெரிய வேணுமென்று, நீ கணக்கு பார்த்தால். அவசியம் அவ்விரண்டும் "**முரண்பாடகத்தான்**" (குற்றம் குறையாகத்தான்) தோற்றும். காரணம்?



உ

நீ ஒரு பக்கத்தைத்தான் காண்கிறாய்.
"மறுபக்கம்!" திரும்புவதற்குள்,
"அவசர!" முடிவெடுக்கிறாய்.
அவை பழி பாவமாகவோ, குற்றம் குறையாகவோ
தோற்றுகிறது. அதனால் சந்தேகம், கலக்கம், பயம்,
கொள்கிறாய். அது "பயமே பலிக்கும்!" என
ஆகி விடுகிறது! ஓர் நிலையில் தூற்றலும், போற்றலும்,
சப்தார்த்தத்தை ஏற்றுக் கொள்ளும் "மறைபக்
குவம்!" தானே? நன்றாக கவனி; ஒலி அலைகள்,
வினையின் தன்மையை அனுசரித்து, ஒன்றோடொன்று
"மோதி கழிகின்றன!" என மௌனமாக
ஏற்றுக் கொள்ளும் போது, பதட்டம் படபடப்பு உனக்கு
எப்படி வரக் கூடும்???

(1) அந்நிலையில் மறைபக்குவம், நீ பெற வில்லை
யாயின், இறை குரு நாமாவில், நீ சர்வார்ப்பணமாக
லயித்திருக்கும் காலை, உன் வினை சம்பந்தம் இல்லாததாயின்
வரும் தூற்றலும், போற்றலும், உன்னை ஒட்டாமல் சுற்றி
இருந்து கொண்டு;



உ

எவர் போற்றவும் தூற்றவும் செய்கிறார்களோ அவர்களையே பந்துபோல் சுவரில் எறியும் அவர்களையே சாரும். அந்த வேகத்தில் அவர்கள் உணரார். உணரவும் முடியாது.

(2) உன் வினை சம்பந்தம் கொண்டதாயின் வரும் போற்றலும், தூற்றலும், உன்னைப் புகழ்பவர்களுக்குப் போற்றலும், உன்னை இகழ்பவர்களுக்கு தூற்றலும், பகிர்ந்து கொடுக்கப்பட்டு, உன்னை எக்கர்மாவும் சாராமல், இறைகுரு உணர்வு உன்னை ரக்ஷிக்கும்.

கீழே கண்டதை கூர்ந்து உணர்வாயாக!

“உறவு” வகையிலோ, “நட்பு” வகையிலோ, உன் “வினை”ப்படி உன்னைப் பின்னியிருக்கும் இவ்வுலகமானது, ஆன்மீக துறையில் செல்லும் உன்னை தடுக்கிறது. அதாவது உன்னைப் பழித்து தூற்றுகிறது. அதாவது உன்னோடு ஒத்து வாழ முடியவில்லையே என, சங்கடப்படுகிறதே. உன்னையும், உன் உறவு நட்பையும் வைத்து, இவ்விளக்கம் தருகிறேன். அவைகளை புத்தி பூர்வமாக நோக்காமல் அறிவு பூர்வமாக உணர்வாயாக.



உ

உன் உறவு அல்லது நட்பின் வாசகம் :—
கோவில் ஆஸ்ரமம் என போகாதே!
மஹான்களை தரிசிக்கச் செல்லாதே!
ஸத்ஸங்கம் பஜனை எல்லாம், இப்போது வேண்டாம். அவை யெல்லாம், ஓர் 60 வயதுக்குமேல், அனுபவிக்கும் காலமாகும். அது இப்போது உனக்கு வேண்டாம். "எங்கும் போய்!" வாழ்ந்தால் "உருப்படுவாய்"! இல்லையேல் "உருப்படமாட்டாய்"!!

உருப்படுவாய் = வெவ்வேறு உருவம் பெறுவாய்!

உருப்படமாட்டாய் = எந்த உருவமும் நீ பெறமாட்டாய்!

எனகூறி, இவ்வுலக உறவும் நட்பும், உன்னை அழைக்கிறது. அவர்கள் கூறும் வழிமுறைகள் :— தீயபழக்க வழக்கங்கள் அனேகம். அதை உன்றால் ஒழிக்க முடியாதுதான். அவர்கள் கூறும், நல்ல பழக்கங்கள் = பொருள் தேடுவதும்! வாழ்வை அழிப்பதும்! அதை விஷேசம் எனச்சொல்லி, ஆடிப் பாடி கொண்டாடி கொட்டமடிப்பதும்! "போகம்" "மோஹம்"! எனச் சொல்லி, புண்ணிய பாபம் எனச் சொல்லியும், கர்மாவின் பெருக்கம் தானே? இவைகளைத் தான், கோடானு கோடி ஜன்மா, எடுத்து, எடுத்து, அனுபவித்துக் கொண்டிருக்கிறோமே?



உ

போதாதா? இன்னும் வினைப் பெருக்கம் தேவையா? வயதான காலத்தில் அவைகளை பார்க்கலாம் என்கிறார்களோ? இன்னும் 100 வருஷம் வாழ அனுமதியிருக்கிறதா? அப்படி வாழ்ந்தாலும் தளர்ந்த காலத்தில், உன் கருவிகள்தான் உனக்கு சாதகமாய் பயன் தருமா?

1. அவர்கள் வழியை உன்னால் பின்பற்ற முடியுமா?
2. உன் வழியை அவர்கள் பின்பற்ற முடியுமா?
3. அவர்கள் வினைமணம் உனக்கு ஒத்து வருமா?
4. உன் வினைமணம் அவர்களுக்கு ஒத்து வருமா?
5. உங்கள் வினைகளை ஒருவருக்கொருவர் உங்கள் எண்ணப்படி விட்டுக்கொடுக்கவோ பரிமாற்றம் செய்து கொள்ளவோ முடியுமா?
6. உங்கள் உறவு பலம்! பணபலம்! அதிகார அஹங்கார பலம்! பக்கபலம்! படைபலம்! அங்கு பயன் தருமா?
7. உன்னை வாழவோ தாழவோ வைக்க அவர்களால் முடியுமா?
அவர்களை ,, ,, ,, உன்னால் ,, ?
8. உலகநியதியில் செல்வம், புகழ், பதவி, பட்டம், வசதி இவைகளில் உன் "வினையின்" படி நீ உயர்ந்தால், அவர்களின் "போட்டி" "பொறாமை" "பேராசை" உன்னை என்ன பாடுபடுத்தும் தெரியுமா?



உ

இப்படிப்பட்ட உறவுகளும் நண்பர்களும், உனக்கு "மித்ருவா? சத்ருவா?" சிந்திப்பாயாக. அவர்களுக்காகத்தான் நீ வாழப்போகிறாயா?

நீ உனக்காக ஸ்ரீ பகவானையும், ஸ்ரீ மஹான்களையும், நம்பி அவர்கள் காட்டும் பாதையில் நீ சென்றால் நீ முக்தி அடைவது திண்ணமே! அதே நேரம் உன்னை, தன் வழிக்கு இழுத்துப் பார்த்த, உறவும் நட்பும், ஓர் "பக்குவ ஆத்மாவாக" இருந்தால் அவர்கள் மட்டும், உன்னுடைய ஆன்ம பலத்தால், (வைப்ரேஷனால்) முக்தி பெறவும் வாய்ப்பு உண்டு.

நீ அப்படிப்பட்ட உறவுகளுக்கும், நண்பர்களுக்கும், உன்னுடைய அனுபவத்தை, "போதிப்பதை" விட, உன்னுடைய "சாதனையால்" அவர்களை உயர்த்த முடியும். ஆகவே முடிந்த முடிவாக, உன் வழியை அவர்களும் ஏற்க முடியாது. அவர்கள் வழியை, நீயும் ஏற்க முடியாததுதான். இங்கு உங்கள் குருவின், "வாக்கு" வேதமாகியதால்,



உ

மனதின் காரணமாய், வினையும்
பெருகி, ஜனன மரணத்தையே கொடுக்கும்!
அப்படி உன் உறவுகளும், நண்பர்களும்,
அவர்கள் வழியை காட்டி உன்னை இழுக்கும்
போதும், அவர்கள் "மனம் நோகாமல்"
சரி சரியென ஆமாம் சாமி போட்டு விட்டு. உன் தெய்வீக
காரியத்தில் "முழுமையாக" ஈடுபடுவாயாக.
(எக்காரணம் கொண்டும் பிறர் மனம் நோகவாகாது.
அதுவேமிகப் பெரிய தர்மமாகும்.)
அவர்களும் உன்னை கண் காணிக்கும் நிலையில், பல முறை
சொல்லிப் பார்ப்பார்கள். உன்னுடைய "திட உறுதியினால்" அவர்கள் மாற முடியும்!!
இல்லையேல் உன்னை மறக்க முடியும். உன்னை கொன்றுவதும்,
தன்றுவதும், அவர்களின் வினை மனதைப் பொறுத்திருக்கிறது
உன் உறவு நட்புகளுக்கு, நீயும் எந்த பொறுப்பும் அல்ல.
உனக்கும் உன் உறவும் நட்பும் எந்த பொறுப்பும் அல்ல.
"ஒவ்வொருவரும்" அவரவர் புண்ணிய பாவ
வினைகளை, பரிமாற்றம் செய்ய வந்த, உறவே தவிர ????
சொந்த பந்த பாசப் பிணைப்பால், பின்னி மாட்ட வந்த,
உறவு இல்லவே இல்லை இதுவே பிரமாண உண்மையாகும்!



# ② "முன்வினையின் பிணைப்பு"!!!

ஓர் உண்மை யென்ன வென்றால்?

"சஞ்சிதம்"! மொத்த மூட்டைகளென்றும்,

"பிராரப்தம்"! தற்காலிக தூலம் என்றும்,

"ஆகாமியம்"! நான், என்னை, என்னுடையது என அஹங்கார, அதிகார, அபிமானங்களால்,

"உரிமை"! செலுத்தியும், "உடைமை"! பாராட்டியும், நமக்கு நாமே வலுவில் ஏற்கும், ஓர் அறியாமையின் "பிணைப்பு"! என்றும் உணர வேண்டும். இது பொதுவான கருத்து ஆகும்!

A. இங்கு சஞ்சிதம் என சொல்லும், மொத்த மூட்டைகள் அனைத்தும், ஸ்ரீ ஸத்குரு சந்நிதியில் செய்து வரும், விசார ஞானத் தீயால் பஸ்பமாகி விடும்!

B. இங்கு பிராரப்தம் என சொல்லும், தூல சரீரமானது, வினைகளை அனுபவித்து தீர்த்தால், அவ்வினையும் முடிந்து விடும்!

இங்கு ஆகாமியம் எனச் சொல்லும் கடும் "ஆசை"! வசத்தால் உடைமையும், உரிமையும், அதிகாரமும் செலுத்திட முடியும் வினை மை, தொடர் வினையாக்கிக் கொள்கிறோம் என உணரவும்.



உ

மேலும் நம் பிராரப்த வினையானது, நாம் கேட்டு வாங்கி வந்ததாக கூறப்படுகிறது. அப்படியானால் அதை நாம் "இஷ்டப்பட்டு" வாங்கியதாக தெரிகிறது. நாம் இஷ்டப்பட்டு வாங்கும்போது, "கஷ்டப்பாடு", துக்கம், பயம், கவலை, சஞ்சலம், சந்தேகம் இவைகளை, நாம் கேட்டு வாங்கமாட்டோம். நல்லதையே கேட்டு வாங்குவோம். ஆனால் நாம் என்ன செய்கிறோம்? மேலே சொன்ன ஐந்திலும், பீடிக்கப்பட்டவர்களாய், சிரமப்படுகிறோம். இந்த சிரமம் எப்படி நமக்கு வந்தது என்றால்??? முந்தைய மூன்று யுகங்களிலும், இல்லாத, கலியுகத்திற்கே "உரியதான", முன்பு கூறியபடி, ஆசைவசப்பட்டு, "உடைமை"யும், "உரிமை"யும், "அதிகாரமும்", செலுத்தி, மேலே கூறிய ஐந்திலும் அவதியுறுகிறோம். ஸ்ரீ பகவான் ஒருவன் உண்டு என நம்புகிறோம். எல்லாம் அவன் அருள் (பொருள்கள்) எனவும் நம்புகிறோம். எல்லாம் அவன் செயல் எனவும் நம்புகிறோம். "அவனன்றி அணுவும் அசையாது என்பதையும், பூரணமாக



நம்புகிறோம். இந்த "நம்பிக்கை! ஸத்தியமானதே"! உனக்கு
உடைமைகளேது? உன் உரிமைகளேது?
உனக்கு அதிகாரமேது? ஸ்ரீ பகவானும் என்ன சொல்கிறான்?
என்று "ஸ்ரீ பகவான் வாக்கியம்"!!!

எம் அன்பான குழந்தைகளே! நீங்கள் அனைவரும்
எம் குழந்தைகளே! உங்கள் அனைவருக்கும் (வேண்டியே) ஆகவே
இவ்வுலகையும், அனைத்து பொருள்களையும், உண்டாக்கினேம். இவ்வுலகம் உங்கள் விளையாட்டுக் கூடமாகும்.
உணவு, உடை, இருப்பிடம், இவை அனைத்தும், எம்மால்
உங்களுக்காகவே, நிரப்பப்பட்டது. நன்றாக விளையாடுங்கள்.
அனைத்துப் பொருள்களும், உங்கள் வினை யறுந்து,
எம் மாயா உங்களுக்கு தருகிறது. எடுத்தும் கொள்கிறது.
வினை அறுந்து வரும் பொருளை, எம் நாமாவைச் சொல்லி
ஏற்கவும். உங்கள் வினை அறுந்து, உங்களை விட்டு
விலகும் பொருளையும், எம் நாமாவைச் சொல்லி, எந்த
கேள்வியும், எதிர்பார்ப்பும் இல்லாமல், விட்டு விடுங்கள்.
அப்பன் சொத்து பிள்ளைக்குத்தான்.



உ

உங்கள் பிராரப்த வினையின் படி, அதை அனுபவித்தால், வந்த வினை மட்டும் முடியும்.

மேலே கூறிய, ஆகாமிய வினையின் படி, அதை நீங்கள், வழுவில் ஏற்றால், வினையும் பெருகுமே? ஜன்மாவும் தொடருமே?

மேலும் உரிமையும், உடைமையும், அதிகாரமும் நீ கொள்ளும்போது, ஆகாமிய வினைக்கும், ஆட்பட்டு விடுகிறாய். ஆத்திரம், ஆவேசம், ஆக்ரோசம், வேகதாபம், படபடப்பு, இவைகளால் உந்தப்பட்டு, பற்பல "கலியின் கோரகுணதோஷங்களுக்கு!" ஆளாகி, ஜன்மாவும் வீணாகிறது. வீணான ஜன்மாவுக்கும், ஏன் ஆளாக வேண்டும்?

மேலும் பிராரப்த வினையானது, வெகு எளிதாகவும், அனுபவ இனிமையாகவும், அனுபவிக்கும் ஓர் "சுக கர்மாவாகும்"! ஆனால் அக்கர்மாவின் அனுபவ நிலையானது, வெகு துக்கமாகவும், பெரும் பளுவாகவும், தாங்க முடியாத வேதனையாகவும், "அதிபயங்கரமாகவும்"! மாறக்காரணம், ஆகாமிய கர்மாவினால் வரும் "மன அழுத்தமாகும்"!



உ

அதாவது நான், என்றால், என்னுடையது, என்ற, அஹங்கார, அதிகார, அபிமான "உடைமை", "உரிமை"யும், பாராட்டும், மன அழுத்தமாகும். மேலும், பிராரப்தமானது, நாம் கேட்டு இஷ்டப்பட்டு வாங்கியது ஆகவும், அதில் இறைவன் கருணையும், இணைந்திருப்பதையும், அது ஓர் "சுககர்மாவே"/ காரணம்,

நாம் எதை கொடுத்தோமோ, அதை வாங்குகிறோம். நாம் எதை வாங்கினோமோ, அதை கொடுக்கிறோம். இங்கு கொடுத்ததோ, வாங்கியதோ பண்டபரிமாற்றமே. இங்கு இறை கருணை இருந்த தன்மையினால், அது வலிய (கடின) கர்மாவாக இருக்க முடியாது. ஆனால் மேலே கூறிய அஹங்கார, அதிகார, அபிமான, உடைமை, உரிமை, பாராட்டுதலால், அதை ஸ்ரீ பகவானிடம் கொடுக்காமல், எனக்கு வேண்டும் என்றும், நான் இப்படி விளையாடி, பல பல ஜன்மா, எடுக்கப் போகிறேன் என்றும், "சொல்லாமல் சொல்லி"/ (வாக்கால் சொல்லாமல் மனதால் எண்ணி) பிறவிப் பிணைப்பை ஏற்படுத்தும், ஆகாமிய கர்மாவாகும்.



உ

இக்கர்மா ரகஸ்யங்களை எந்த மஹானும்

சொல்லவும் இல்லை! எழுதவும் இல்லை!!

காரணம்:- "அதனை அதில் அதி சுவையாக"!!!

சார, மண, இனிமை, போதையில், மாட்டிக் கொண்டார்கள்.

இது "கலியுக தர்மமாகும்"!!!

(1) நீங்கள் அனைவரும், எம் குழந்தைகள் என்பது ஸத்தியமே! இந்நிலையில், நீங்கள் வேறு, யாம் வேறு தான். இது துவைதம்: காரணம், எம் விளையாட்டில் மயங்கி இருக்கிறீர்கள்.

×—×—×—×—×—×—×—×—×—×—×—×—×—×

(2) இன்னும் சில காலங்களில், உங்கள் ஸத்குரு கிருபையினால், அவர் அனுபவம் பெற்று, அறிவு வளர்ச்சியினால், முழுமையும் முதுமையும் இணைந்து எம்நிலை பெற்று விடுவீர்கள். இங்கு நீங்களும் யாமும் சமமே! இது விஷிஸ்டாத்வைதம்: காரணம் எம் விளையாட்டு, உங்களுடையதாகி விடும். விளையாட முடியாது. எல்லாம் உங்களுடையதானால், எவர், எவரிடம், எதை வைத்து, விளையாட முடியும்???

×—×—×—×—×—×—×—×—×—×—×—×—×—×

(3) மேலும் ஸ்ரீ ஸத்குரு அனுபவம் பெற்று. யாமே நீங்களாய். நீங்களே யாமாய்! பூரணத்வம் பெற்று விடுவோம். இங்கு நாமரூப குண சம்பந்த, "ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகள்"! இல்லையெனவும்;



உ

கண்ணால் காண முடியாத, அறிவால் உணர

கூடியதான, "காலாதீதபர"!

சொரூபமே நாமே ஆகி, அது நாம் நாமே அது;

என்ற, "ஸ்வயஞான, பிரம்மா,

னந்த, சாட்சாத்காரம்"!

பெறுவது, 'அத்வைதமாகும்'! எனச்

சொல்லி முடித்தான், எம்பிரான் ஆகிய (திருடன்) கண்ணன்

சொல்லாமல் சொல்லி: (வாக்கால் சொல்லாமல், மனதில் எண்ணிய) உன்னுடைய உறவு, நட்பு,

இவர்களின் பழக்க வழக்கங்களை (நடை, உடை, பாவனை)

"இணக்கவர்ச்சியாக"! காணும் போதும்,

கேட்கும் போதும், பேசும் போதும், ஓர் மயக்க

போதைக்கு ஆட்பட்டு, இப்படி நாமும் அனுபவித்தாலென்ன!

இது நமக்கும் கிடைக்காதா? என்ற மனஏக்கத்தின் கொக்கியை

போட்டு கர்மாவை வலிய ஏற்றுக் கொள்ளல்! அவ் வெண்ணமே

பதிவேடாகி, அதுவே கர்மாவாகி, அதுவே ஜனனமரணத்தை கொடுக்கும்.



உ

சரீரத்திற்காகவே விதிக்கப்பட்ட, "புண்ணியபாப" கர்மாவை, மனமானது, எழுச்சியும், வீழ்ச்சியும், (வேகமும், தளர்ச்சியும்) இல்லாமல், சுகமாக முடிப்பதுவே, இறைகருணையாகும். ஆனால் அந்த இறைவனைச் சாராமல், அஹங்கார அதிகார, அபிமான இன்ப போதையில், மயங்கிய மனமானது, "கர்த்தத்துவத்தை [தானே] ஏற்றுக் கொள்வதால், இன்ப துன்ப "உணர்ச்சி"களுக்கு ஆளாகி, உபாதைகளையும் ஏற்கிறது. வினைகளையும் தானே ஏற்கிறது. இங்கு ஸ்ரீ பகவான், பொறுப்பேற்க முடியாது. எல்லாம் நீயே என்றும், எல்லாம் உன்னால் என்றும், எல்லாம் உன்னுடையதே என்றும், ஸ்ரீ பகவானிடம் விட்ட நிலையில், பொறுப்பு அவனுடையதாகி விடுவதால், நம் மனமும், அவன் மேனியிலேயே, கரைந்து லயமாகி விடுகிறது. இயல்பாக கர்மாவும், எந்தடையுமில்லாமல், முடிவடைகிறது. அங்கு பழைய கணக்கு மட்டுமே முடியும். புதிய கணக்கு தொடராது. ஆகவே ஜன்மா இல்லை. சரணாகதியாகிய, "தியாக உணர்வு" இல்லாமல், வேறு எந்த கர்மாவாலும், ஆத்மஞானம் பெற முடியாது. இதுவே பிரமாண உண்மையாகும்.



ஓ. ஓ

# "அடங்கு! அடக்காதே!"

எண்ணம், சொல், செயலால் அடங்கி நட என்றும்,
,, ,, ,, அடக்க எண்ணாதே

என்பதே ஸ்ரீமஹான்களின், அனுபவ வசனமாகும்.

"வாக்கே" ( வாழ்க்கையாகவும்;
ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளாகவும் இருக்கிறது

இன்று இக்கலியுகத்தில், பேச்சை குறை யெனச் சொல்வதில்லை அதற்கு மாறாக பேசக் கற்றுக் கொள் என்றும், "பேச்சாழியாக இரு" (வார்த்தையிலேயே ஆழ்ந்து போ) எனவும் கலியுக மஹான்களின், வாக்காக இருக்கிறது.

யாகாவராயினும் "நாகாக்க"! என்றான் வள்ளுவன்.

"பழிச்" சொல்லாகவும்; "பாபச்" செயலாகவும்; வருவதும், நம் வாக்கே (நாக்கே) இவ்வுற வாழ்க்கையில் இன்பம் தருவதும் வாக்கே! இவ்வுற வாழ்வில் துன்பமாக முடிவதும் வாக்கே! அதேபோல், தெய்வீகத்தில், உறுதுணையாக இருப்பதும் வாக்கே! தெய்வீகத்தை உணர வொட்டாமல், தடைப்படுத்துவதும் வாக்கே! இவ்விரு நிலைகளிலும் பயன் படும், இந்த "நாவாகிய வாக்கு மௌனமாகில்!" பரமார்த்திகமாகிய, ஜீவன் முக்தி சாத்தியமாகும் என்பது ஸ்ரீமஹான்களின் அனுபவம்.



உ

**"வாக்கே அக்கினி"** என்றும்;
**"வாக்கே அமிர்தம்"** என்றும்;

அனுபவ ஞானிகள் சொல்வதுண்டு. வாக்கு விரயமானால், அது புல்லில் சிதறிய தானியம் என, பொறுக்க முடியாமல் அது வீணாகிவிடுகிறது. அவ்வாக்கு, வலிய கர்மாவுக்கும், **"சாபம்"** கொடுக்கும் நிலையில், அவல நிலைக்கும், மறு ஜன்மாவுக்கும், வித்தாகிறது.

அனேக குடும்பங்கள், அவர்கள் வாக்காலேயே பழியாபத்திற்கும், கொடூர செயல்களுக்கும், தாங்க முடியாத கஷ்டம், கவலை, துக்கம், துயரம், பயம், சஞ்சலம், சங்கடம் முதலிய **"கர்ம வினைக்கும்"** ஆளாகிவிட்டு, மேலே சொன்ன இவைகள், யார் செய்த தீவினையோ என பிறரையும் தெய்வங்களையும், நொந்து கொள்கிறார்கள். பிறரும் உன் துன்பத்திற்கு, காரணம் அல்ல. தெய்வமும் உன் துன்பத்திற்கு, காரணம் இல்லை. **"உன் வாக்கே"** காரணம் என நீ உணர முடிவதில்லை. அதன் காரணம்? உன் அவசரம், ஆத்திரம், ஆவேசமும் ஆகும். நீ விதைத்த வினை விதையின் பயனை, நீதானே அனுபவிக்கவேண்டும்.

இங்கு இறை குரு **"உணர்வு"** இருந்தால், அக்காலங்களில், உன் வாக்கு சிதறாமல், அது பாதுகாக்கும். அதிகாரமும், அஹங்காரமும், ஆதிக்கமும் கொண்டால், அதன் மோகத்தினால் வாக்கும் விரயமாகும். கர்மாவும் பெருகும்.



உ

அனைத்து ஜீவர்களும், அவரவர் கர்மாவின்படி, அவரவர் மனஇயக்கத்தை வைத்து, "விதி" நாயகனாகிய காலதேவன், (இறைவன்) எந்த பாரபட்சமும் இல்லாமல், "சுகமாகவே!" நடத்திக் கொண்டிருக்கிறான்.

யாம் முன் சொன்னபடி, ஆகாமிய கர்மாவின் பாரத்தால், மனம் அசுத்தமாகி, குற்றம் குறை தோற்றியும், அனைத்தும் பேதமாக காணப்பட்டும், எங்கும், எதிலும், எந்நிலையிலும், விருப்பும் வெறுப்பும் கொண்டும், "பார்வையில்" களங்கமும் "கேட்கும்!" ஒலிகளில் விகாரமும் ஸ்பரிசத்தில் (தொடுவதில்) மோகம், காமம், போகம், இவைகளால் உந்தப்பட்டு, அதை மனதால் எண்ணியும் அதை "வாக்காக!" புலம்பியும், விவகாரத்தை (பிரச்சனைகளை) உருவாக்கி, ஆத்ம சொரூபமான பிரம்ம சொரூபமான, "சுகசொரூபமான!" உலகை கோர சொரூபமாக்கி, "விவகார ஸத்ய"! உலகமாக்கி, நாமும் கெடுகிறோம். மற்றும் ஜீவர்களையும் கெடுத்துக் கொண்டும் இருக்கிறோம்! இது நமக்குத் தேவையா?



நம்மை நோக்கி, உ
ஓர் ஜீவனிடம் இருந்து, கடும் சுடும் வாக்கு,
வந்தால், நாம் என்றோ கொடுத்த, வினையின்
“பண்டம்” திரும்பத் தரப்படுகிறது
என, அக் கசப்பான உணவை, (இறை நாமாவை சொல்லி) உண்டு
கழித்துக் கொள்ளவும். இங்கு பொறுமையே சாதனை!
அங்குமாறாக, இனிமையான வாக்கை கொடுக்க,
ஸ்ரீபகவான் நாமாவுடன் இணைந்தால், (கொடு) அங்கு சம்மதம்
என்றால், அவன் இசைவான். சம்மதம் இல்லையாயின்,
அவன் நிறுத்திக் கொள்வான். அச் சம்பவத்தை
மன்னிக்கவும், மறக்கவும் விட்டுக் கொடுத்து நாம் விலகவும்
“அவன் (இறைவன்) கருணையினால்” கூடியும். மேலும்
அவன் கிருபையினால், நீ அடங்கும் போது, அவனும் (எதிரியும்)
அடங்கியே தீரவேண்டும். இது எப்படியென்றால்? ஓர்
கயிறு கீழே கிடக்கிறது என வைத்துக் கொள். அக் கயிறுக்கு
இரு முனைகள் உண்டு. வினை, மனம், விதி வசத்தால், ஓர்
முனை எழுந்து ஆடும் போது, மறுமுனையும் எழுவதோ, ஆடுவதோ
இயல்புதான். ஆனால் இங்கு நீ, இறை உணர்வோடு
இருந்தால், இயக்கம் அவனுடையதாகி (இறைவனுடையதாகி) விடும். மேலும் கர்மா பெருகாமல் காப்பதும் அவன்
பொறுப்பாகி விடும். ஒன்று உன் மனதை, எழுச்சியில்லாமல்



உ

செய்ய, அவனுக்கு திறமை உண்டு. அல்லது
கர்மா பெருகாமல், உன்னை அசைக்கவும்,
அவனுக்குத் திறமை உண்டு. அதாவது
அக்கோட்சியை காணுவாய். ஆகவே அங்கு
எழுச்சியற்று, "சிற்பம் போல்"!
இருந்து கொண்டு,
எந்த விகாரமும், விவகாரமும் (பிரச்சனையும்) இல்லாமல்
செய்து, ஆனந்தபரனாக நீ இருக்க முடியும். (அவன் கிருபையால்)

"மனமுடிச்சு"! என்பது அடங்கி இராமல்,
அடக்கி ஆள்வதால் வரும், ஓர் "மனோபாரமும்"!
வலிய வினையின் தொடர் "முடிச்சும் ஆகும்"!

நாம் அடங்காமல், பிறரை அடக்க எண்ணுவதையே,
ஆத்திரம் அறிவு நாசம் என்றும், கோபம் பாப மறியாது
என்றும், கோபம் சண்டாளன் என்றும், கேடு வரும் பின்னே
மதிகெட்டு வரும் முன்னே என்றும், கெடுபவனே கேடு
நினைப்பான் என்றும், தவளையும் தன் வாயால் கெடும் என்றும்,
வாழ்வும் சாவும் தன் வாயால் என்றும், "அடங்காமை
ஆரிருள் (காமம், குரோதம், லோபம், மோகம், மதம், சந்தேகம்)
உய்க்கும்"! என்றும் ஸ்ரீ மஹான்கள் சொல்லி, தம்
அனுபவத்தை உணர்த்தினார்கள்.



உ

சில செயல்களில் கடும் விளைவுகள் தோன்றினால், உடனே அதன் முடிவை காணாமல் "இறை உணர்வுடன்" நோக்கினால், அது ஏதோ ஓர் கடன் தீர்க்கப் படுகிறது என உணர முடியும். ஒன்று "பழைய" கணக்கு முடியலாம். அல்லது "புதிய" கணக்கு தொடரலாம்! இதை காணும் உனக்கு, அது சம்பந்தம் உண்டானால், நீ இறை உணர்வுடன் இருக்கும் தன்மையால், (அஹங்கார, அதிகார அபிமான, ஆதிக்கம், உடைமை, உரிமை இல்லா தன்மையால்)

1. எவ்வினையும் உன்னைப் பற்றாமல் செய்வான்!
2. நடந்து முடிந்ததும், அது கனவாக கூடத் தோன்றாது மறையும்!
3. பொம்மலாட்டமாக ஆனந்தமாக தோன்றி மறையும்!
4. அங்கு உறவும், நட்பும், தோன்றாமல், ஐக ஜீவனை தோற்றும்!
5. எல்லாம் நீயே என்ற உணர்வால் பேரானந்தம் ஒன்றே தோற்றும்! "விஷயானந்தம்" அங்கு வரா தொழியும்!
6. அங்கு பழைய கணக்கு மட்டும் முடியும். புதிய கணக்கு அவசியம் தொடராது!
7. மேலும் இங்கு "பயமே பலிதம்" என்பதையும், "சந்தேகமே தோல்வி" என்பதையும் கருத்தில் கொள்வாயாக!



# 4 குரு:- "பணிவே பாதை யாக"! கொள்வாயாக!

சிஷ்யன்:- ஐயா! தாங்கள் சொல்வது, கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் நடைமுறைக்கு, ஒத்து வராதது ஆக தெரிகிறதே! எப்போதும் பணிவுடன் இருந்தால், வாழ்க்கை பாதையில், செல்ல முடியாது. வாழ்க்கை வாழ வேண்டுமென்றால், சாதனையாகிய பணிவு வர முடியாது.

குரு:- பணிவு என்பது, யாம் எதைக் கூறுகிறோம், எனத் தெரிகிறதா?

சிஷ்யன்:- எண்ணம், சொல், செயலால், அடங்கி நடப்பதைத் தானே சொல்கிறீர்கள்? அதாவது நாவை அடக்கு, எனச் சொல்கிறீர்கள்! இக்கலியின் கோரமான பிடியில், சிக்கியிருக்கும் நாங்கள், பேச்சை குறைத்தாலோ அதட்டி அடாவடியாக பேசாமலிருந்தாலோ, எப்படி வாழ முடியும்? எங்கள் தர்மானை எப்படி தொலைக்கமுடியும்?

குரு:- அது சரி உன் வழியில், நீ அடங்காமல், அதட்டி அடாவடியாகபேசி, இதுகாலபரியந்தம் என்ன சாதித்து இருக்கிறாய்? அதை எண்ணிப்பார்?

சிஷ்யன்:- ஐயா அப்படிப்பார்த்தால், ஒன்றும் சாதித்தது தெரியவில்லைதான்? அதனால் மேலும் மேலும் பிரச்சனை தான் தோன்றுகிறது.

குரு:- அப்படியானால் உன்னிலையில் பேசினால், எந்த சுகமும் இல்லையென தெரிகிறதல்லவா?



சிஷ்யன் :- ஆமாம் அது உண்மைதான். "நடைமுறை வாழ்க்கையில்" விளக்கம் கொடுத்தும் வேகமாக பேசியும் சாதிக்க முடியாததை, நாவடக்கி "மௌனத்தால்" சாதிக்க முடியும் என சொல்கிறீர்களா?

குரு :- யாரும் அப்படி பேசாமல், நாவை அடக்கு எனச் சொல்லவில்லையே?

சிஷ்யன் :- அப்படியானால் அடங்கு அடக்காதே, எனத் தாங்கள் சொல்லும் தத்பர்யம் என்ன?

குரு :- பேச்சை "குறை" என்றுதான் சொல்கிறோமே அல்லாது, பேச்சை "நிறுத்து" எனச் சொல்லவில்லையே.

சிஷ்யன் :- முள்ளை முள்ளால் எடுப்பது போல், அவர்கள் வார்த்தைக்கு தகுந்தால் போல், வேறொரு வார்த்தையை போட்டால் தானே அவர்களை சும்மா இருக்க வைக்க முடியும்?

குரு :- அப்படியா உன் வாசகம்? உண்மையில் பார்த்தால் முள்ளை முள்ளால் எடுத்ததாக தெரியவில்லையே? வேறொரு "முள்ளை" அல்லவா உள்ளே புகுத்துகிறாய்?

சிஷ்யன் :- புரியவில்லையே? வேறொரு முள்ளை, எப்படி யாம் புகுத்துகிறோம், எனச் சொல்கிறீர்கள்?



உ

குரு:- அவன் உன்னை சொல்லால் அடிக்கிறான். நீயோ பதிலுக்கு, அவனை வடிசொல்லால் அடிக்கிறாய்.

சிஷ்யன்:- வடிசொல்லா? அது அப்படியில்லையே, அவன் வார்த்தைக்கு, விளக்க வார்த்தையைத் தானே கொடுத்து, அவனை சமாதானப் படுத்துகிறேன்.

குரு:- வேகவார்த்தைகள் விளக்கம் கொடுக்குமா? அது "கலகத்தை" உண்டுபண்ணி "கோபத்தை" உண்டுபண்ணுமா? சற்று சிந்தித்துப்பார்?

சிஷ்யன்:- (சற்று ஆழ்ந்து சிந்தித்தான்) ஆமாம் வேகவார்த்தை பலன்தராதுதான். ஐயா! அந்த நேரம் பேசாமல், இருக்க முடியவில்லையே. அப்போது பேசினாலும் அது ஆபத்தே. பேசாமல் இருந்தாலும் நம்மை "பேடி" என எண்ணுவானே? தைரியமாக நடக்காதவன். ஓர் ஜடம். இவன் ஓர் இயலாதவன் என எண்ணி "கேலிக்" குதிப்பானே! எள்ளி நகையாடுவானே!

குரு:- இப்போது நீ சொன்ன வாசகம் எல்லாம் உன்னுடைய "மனைய கற்பனைதானே"?

சிஷ்யன்:- இல்லை இல்லை ஐயா! இவை எம் அனுபவங்கள். பலரிடமும் இப்படி மோதி, மோதி, அவர்கள் எண்ணமும், யாமும் பலரை அவ்வாறு எண்ணவும், இவை எம்முடைய "உலக அனுபவமாகும்"!



உ

குரு:— அப்படியானால் இதுவரை உலக அனுபவத்தைத்தான் சொன்னாய். உன்னுடைய "தெய்வீக" உண்மையின் அனுபவத்தை, நீ உணரவில்லையெனத் தெரிகிறது.

சிஷ்யன்:— உங்கள் தெய்வீக அனுபவம் என்பது அடங்கு. அடக்காதே வார்த்தையை குறை. இவைகள்தானே? ஐயா! நாங்கள் என்ன கூறுவீர்களோ? அல்லது என்ன செய்வீர்களோ? யாம் அறியோம்? உடல் உலக பிரச்சினைகள் இல்லாமல் "உண்மையில்" ஒன்றானால் சரி!

குரு:— உன் தாவத்திற்கு வயது என்ன ஆகிறது?

சிஷ்யன்:— என் ஆயுள் ஜாதகத்தை கணிக்கப் போகிறீர்களா?

குரு:— உனக்கு ஆயுள் ஏது? நீயோ காலாதீதமானவனே! என் கேள்விக்குப் பதில்?

சிஷ்யன்:— ஐயா! 55 ஐம்பத்தி ஐந்தாகிறது!

குரு:— இந்த ஐம்பத்தி ஐந்தில், ஆன்மீக துறையில், (இந்த அன்பின் குடிலின் அனுபவத்தில்) எத்தனை ஆண்டுகள் உனக்குப் பரிச்சயம்?

சிஷ்யன்:— சுமார் பத்து வருஷம் பழக்கம். ஆனால் அது சாதாரண அனுபவம் இல்லை. ஸத்தான அனுபவம்.

குரு:— அதுதான் தெரிகிறதே! நீ ஸத்தான அனுபவம் உள்ள குழந்தையானால் "வாழ்க்கை" விரயமாக்கியிருக்க மாட்டாய். குழப்பமும், பயமும், உன்னிடம் எப்போ அகன்றிருக்கும்.



உ

குரு:- உன்னுடைய உலக அனுபவ நிலையில், நீ கூறிய அவ்வார்த்தைகள் அனைத்தும், "ஆசாபாச பழக்க வழக்க தோஷ"! அனுபவங்களாகும். இது ஸ்ரீ பகவான் மீது "முழு நம்பிக்கை"! இல்லாததே காரணம் ஆகும்! அது அரைகுறை நம்பிக்கையாகும்!

சிஷ்யன்:- யாம் ஸ்ரீ பகவன் நாமாவை, இடையறாது ஜபிக்கத்தானே செய்கிறோம். "ஸ்வாமியே"! என்பதே, எம் உயிர்மூச்சாக இருக்கிறது. இதைவிட நம்பிக்கை, என்பது எப்படி இருக்க முடியும்?

குரு:- அது வாய் ஞானம் ஆகும்! அது அனுபவ ஞானம் இல்லை! சொன்னதைச் சொல்லும் கிளிப் பறவை போன்று, சொல்கிறயே தவிர, அது அனுபவத்தில் வரவில்லையே. தீமை செய்தவரையும் வாழவை என்பதையும், துன்பம் வரும்போது அதை இறையருள் என ஆனந்தமாக ஏற்றுக்கொள் என்பதையும், கொடுத்ததை வாங்குகிறோம், வாங்கியதை கொடுக்கிறோம் என்பதையும், உனக்கு அனுபவம் ஆகவில்லையாயின்



குரு:- அது "மெய்ஞானம்தானே"?

அது அனுபவ ஞானம் இல்லையென்றே சொல்வோம்.

சொன்னதைச் சொல்லும் கிளிப்பறவை யென, ஏன் சொல்கிறோம் என்றால்? வீட்டில் வாழும் கிளியானது, முருகா, கிருஷ்ணா, ராமா, கோவிந்தா, என எந்த நொடியும், சொல்லிக் கொண்டேயிருக்கும். ஆனால் ஓர் பூனை அதன் கழுத்தை கௌவும் போது, கீச் கீச் கீச் என்றுதான் கத்துமே தவிர, முன் சர்வ சதாவும் சொல்லி வந்த ஸ்ரீ பகவன் நாமாவை மறந்து விடும். இதுதானே உன்நிலையும்?

சிஷ்யன்:- உண்மைதான் ஐயா! வினையால் உடல் நசுக்கப்படும் போது, எப்படி ஸ்ரீ பகவன் நாமாவை எண்ணி அழைக்க முடியும்?

குரு:- அப்படியால் இந்த பத்து வருஷ அனுபவ பாடத்திலும், எல்லாம் அவன் பொருள் என்றும், எல்லாம் அவன் செயல் என்றும், அவனன்றி அணுவும் அசையாதென்றும், எல்லாம் ஈசன் செயலென்றும், கேட்ட உன் அனுபவ பாடம் என்னாயிற்று!

சிஷ்யன்:- உண்மைதான். அந்த மெய்விக உணர்வு, நிலைத்திருக்கயாம் என்ன செய்ய வேண்டும்?

குரு:- இடையறா அப்யாசம் தான் வேண்டும். நன்கு கவனி. "எல்லாம் அவன் செயல்" என்றால், அங்கு உன் செயல் ஏது? உனக்கு இருப்புதான் ஏது?



உ

சிஷ்யன் :- உண்மைதான் ஐயா! எமக்கு இருப்பும் இல்லை. எமக்குச் செயலும் இல்லை தான். பின்னர் இந்த, பாழாய் போனமன மானது, ஒடுங்க மறுக்கிறதே! அலைபாய்கிறதே! சஞ்சலம் அடைகிறதே! சந்தேகம் அடைகிறதே! இதை எப்படி இல்லாமல் செய்வது!

குரு :- இதற்குத்தான், யாம் முன்பே கேட்டோம் உன் வயதை. ஐம்பத்தி ஐந்து என்றாய். அதில் ஓர் பதினைந்து வருடம், அறியாப் பருவம் ஆனாலும், மீதி நாற்பது வருடத்தில், ஸத்ஸங்க பரிமாற்றம், பத்து வருடம் தானே? மீதி 30 வருட அனுபவம் யாம் முன்பு கூறிய, ஜகவாச பழக்க வழக்க தோஷம் தானே? அதிலேயே ஊறிப்போன பழக்கம், சாமான்யமாக போகுமா? ஆனாலும் சந்தேகம் பயம் கலக்கம் இல்லாமல் "உள்நம்பிக்கை"யானது, தளர்வு, சோர்வு, கலக்கம், பயம், சந்தேகம் இல்லாமலிருந்தால், அவஸ்யம் உணரல் முடியும்.

சிஷ்யன் :- தாங்கள் கூறும் வகையில், "ஸ்திர தன்மை" எப்போது பெறுவோம்? (என உருகினான்)

குரு :- அவஸ்யம் "உணரமுடியும்"! அப்படி முடியாதவன் அதன் "திருவடியை" பற்ற முடியாது. திருவடியை "பற்றியவன் அவனாகி" அவனும் தானும் ஒன்றாகி. முடிவில் அது ஆகியே இருப்பான்.



குரு:— குழந்தாய்! உன் வாழ்வில், அடாவடியாகப் பேசிப் பேசி, ஒரு பயனும் இல்லை எனத் தெரிந்தும், அவைகளை ஏன் உன்னால் விட முடியவில்லை? அவைகளில் ஆனந்தம் காண்கிறாயா? பிரச்சனைகள் முடிவுறுகிறதா? கர்மா தான் பெருகாமல் இருக்கிறதா?

சிஷ்யன்:— உண்மைதான் ஐயா! பிரச்சனைகளும் முடிவதில்லை. கர்மாவும் பெருகுகிறது எனவும் தெரிகிறது. ஆனாலும் அப்படி பேசவில்லையாயின், "எதிராளியை" சமாளிக்க முடியவில்லையே. முன்பு யாரோ சொன்னபடி, ஏவாதவன், இவன் பொன்னன்சட்டி என, அழுந்திக்கொண்டு வந்து விடுகிறார்களே.

குரு:— அப்படியான உன்னுடைய, பழக்க தோஷ கற்பனையை ஒழித்துவிட்டு, "இறை கருணை" என்ற, ஆனந்தமான கற்பனையை ஏற்கலாமே? இரண்டும் கற்பனைதான் என்றாலும், இறைகருணை கற்பனையால், மனம் பாரம் ஆகாது, வினையும் சேராதே!

சிஷ்யன்:— எப்படி? வார்த்தையை குறைத்தால், அவ்வுலகம் ஆகும் என்கிறீர்களா?

குரு:— நன்றாக கவனி. "இரு" கை அசைந்தால் ஓசை. "ஒரு" கை அசைந்தால் ஓசை இல்லை. இதுவே பிரமாண உண்மையாகும். அதேபோல் இங்கு நீ அடங்கினால், எதிராளியும் அடங்கியே ஆகவேண்டும். ஆனால்



குரு:— நீ அடக்க எண்ணினால், எதிராளியும் உன்னை அடக்கியே தீருவான். இது நம் இறைவனின் ரகஸ்ய தீர்ப்பாகும். மேலும் நீ முன்பு சொன்னபடி, ஒன்றை ஒன்றால் எடுப்பதைத் தவிர்த்து, வேறொரு ஒன்றையும் அவன் மேல் செலுத்துகிறாய். அவனும் பதிலுக்கு, வேறொரு ஒன்றை உன்மேல் செலுத்தியே தீருவான். அங்கு யுத்தம் ஓயாதது தான்? யுத்தத்தின் நடுவில், சமாதானமாகிய வெண்கொடியை காட்டுவது, எப்படியோ அதேநிலையில்,

**"மௌனம் கலக நாஸ்தி"!**

என்பது இங்கு உண்மையாகும். காரணம் உன்னிடமும், அவனிடமும், இருந்து நாடகம் நடத்தும் இறைவன்,

**"நீ அடங்கும் போது"** அவனும் அடங்கியே ஆகவேண்டும். அதுவே இறைவனின் பெருமையும், மஹிமையும், கருணையுமாகும். அப்படி நீ வெண்கொடி காட்டுவதால் நீ கோழையல்ல. நீ இயலாதவன் அல்ல. நீ சோம்பேறியும் அல்ல.

**"யாம் இறை சொரூபமாகவே"!**

இருக்கிறோம் என சிக்னல் செய்கிறாய். அவனும் அதை ஏற்றே தீர வேண்டும். ஆனால் ஆரம்பம் சற்று கடினமே! எல்லாம் ஈசன் செயல் என்பது இங்கு தான் அனுபவமாகும்.



உ

குரு:– பவகாலம் சகவாச பழக்க வழக்க தோஷங்களில், பழகி விட்ட உன்னுடைய, "மாயா மனமானது" இந்த இறையாற்றலின் ஸத்வ குணத்தை, ஏற்க முடியாதுதான். நாம் "நாமரூபகுண" ஜகத்தை அடைந்து அனுபவிக்க வரவில்லை. என்றும் "இறைகுரு கருணையால்" காலாதீத பரசொரூபத்தை அடைந்து, "அது நாம். நாமே அது" என ஆக வந்தோம் என்ற, உறுதியான நிச்சயத்தினால், சகவாச பழக்க வழக்க தோஷங்களை, ஒழிக்க முடியுமே யன்றி. வேறு "எக்கர்மா"வின் அப்யாசங்களாலும், நாமரூப ஜகத்தையும், அதன் பழக்க வழக்க தோஷங்களையும், அழிக்கவும் முடியாது. உன்னுடைய "பரப்பிரம்மானந்த" நிலையை பெறவும் முடியாது.

இதுவே பிரமாண உண்மையாகும்!
எல்லாம் ஒன்றே! அது நலமே!
அது சுகமே!
அது யாமே! அது நீயே! இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!

பாபா.



## ௮. "மனமே மாயை"! "மனமே மறைந்து"!!

"அக்னி"! ஆக்கத்திற்கும் பயன்படும். அதுவே அழிவுக்கும் பயன்படும். அதுபோல் பிறப்பிறப்பென்னும், புண்ணிய பாவத்திற்கும், இந்த மனம் பயன்படும்! மோட்சத்தின் திறவுகோலாகவும், மனம் பயன்படும்!! சொந்த பந்த பாச உறவுகளும் மனதின் செயலே!

"இறை நம்பிக்கையில்!!" எல்லாம் இறைவன் பொருளே என்றும்; எல்லாம் இறைவன் செயலே என்றும்; அவனன்றி அணுவும் அசையாது என்றும்; நடப்பதெல்லாம் நாராயணன் செயலே என்றும்; "இறையாற்றல்"!!! பெற்று; அனைத்தும் ஒன்றே என்றும்; அநுபவமே என்றும், அது நாமே, நாமே அது! என்ற "பரமாநந்த"! ஸ்திதியை அடைந்து, மனத்தில் இரண்டறகலந்து, "மறைந்தாகுவதும்"! இந்த மனமேயாகும்!



"மாயையின் மகனே மனம்"!

லௌகீக நிலையிலும் மனம் வேண்டும்!

தெய்வீக நிலையிலும் மனம் வேண்டும்! ஆனால்

"பரமார்த்தத்தில்" மனம் இல்லை என்றும்,

"மனம் இருக்கமுடியாது என்றும், அங்கு மனம் மறைந்தாகிவிடுகிறது" என்றும்,

உணர்வுபூர்வமாக உணர வேண்டும். இங்கு தெரிவதோ, அறிவதோ, இல்லவே இல்லை. (தெரிவது என்றால் காண்பது அறிவது என்றால் வரிவடிவமோ, ஒலிவடிவமோ ஆகும் "உணர்வது" என்றால் "சுவை" ஆகும்!)

லௌகீக நிலையில் நாமரூப ஜகத் சொரூப கற்பனையால், மனம் விரிவடைகிறது. இங்கு ஸத்வகுணம் மேலோங்காது. ஆங்காங்கே காணப்படும். ஆனால் ரஜோ, தமோ குணங்கள் மேலோங்கும். மேலும் இது "கலியின்" காலமாக இருப்பதால், ஸத்வகுணம் காண்பது வெகு வெகு வெகு வெகு துர்லபம். அதன் காரணமாக, இந்த மனதின் வெறியாட்டத்தால், "ஜனன மரண" சுழற்சி வேகமாகும்.



தெய்வீக நிலையில் தேவ தெய்வ தன்மையானது, "ஸத்வகுண" நிலையில், அருள் மணம் வீசும். இந்நிலையில் புண்ணியங்களாகும் இம்மணமானது "ஸர்வார்ப்பணத்தால்" தேவ தெய்வங்களின் வடிவங்களில் நிலை பெற்று, அவைகளே தாமாகி, "ஸத்தியகர்ம" வடிவம் பெற்ற இம்மணமானது, தெய்வ கிருபையினாலும், ஸத்குரு கிருபையினாலும், பரமார்த்திக நிலை பெற, தகுதி உடையதாகிவிடுகிறது.

பரமார்த்திக நிலை: லௌகீக விஷய (விஷம்) ஆனந்த மனமானது, சாதனையால், தெய்வீக பேரானந்தமாக, அதாவது பெயரளவில் "ஸ்ரீபகவன் நாமாவில்" அனுபவித்த அந்த மனமானது, முக்குணதோஷங்களையும் இல்லாமல் பண்ணி, "நிர்க்குணத்தில்" பிரவேசித்து இயல்பாகவே பிரகாசிக்கிறது. பரமார்த்திகமான "அகண்டபாவன"யில், அதாவது



"சர்வசாட்சியில்!" இந்தமாயா மனம் புகுந்தமாத்திரத்தில், தன்னுடைய "மனமாயையின்"!!!!! இயக்கத்தை முழுமையாக இழந்து, "மஹத்தாகிய!" நிலையை பெற்று விடுகிறது.

இதன் விளக்கம் எப்படியென்றால்? லௌகீக உலக நிலையில், முக்குண, மூவினை, சம்பன்னராய் விளையாடிய இந்தமனமானது, "புண்ணியபாபம்"! சம்பந்தம் கொண்டு, கீழான பிறவியும், மேலான பிறவியும், பெற்று சம்சார சாக்கடையில், விஷயானந்தமாக விளையாடியது. தெய்வீக நிலையில், "ஸத்குண"! சம்பன்னராய் விளையாடிய இம்மனமானது, "ஸத்திய தர்மத்தை!" மட்டும் ஏற்றுக் கொண்டு, மனிதனில் மேலான பிறவியும், தெய்வீகத்தில் "பதமுக்தி"யும் பெற்று, பேரானந்த கடலில், பேரானந்தமாக விளையாடியது. லௌகீகத்திலும் இம்மனதிற்கு கர்மா உண்டு. தெய்வீகத்திலும் இம்மனதிற்கு கர்மாவுண்டு. ஆதலால் இவ்விரண்டுமே,



"ஞானமான" நிஜமாகும்!
பாரமார்த்திகமான, அகண்டபாவனையாகிய.
அதாவது அகண்டாகார விருத்தியாகிய,
அதாவது சர்வ சாட்சி தன்மையாகிய,

"அகண்டானந்தபாவனையே"

மாயாமனம் மறைந்தாகி, தம் யதார்த்த சொரூபத்தில், தவழ்ந்து நிலையாகும். இதுவே பிறவா நிலையின், முடிந்த முடிவாநிலை யாகும் என, ஸ்ரீமஹான்கள் சொல்லவில்லை காரணம்?

இதன் அடுத்த நிலை, "அகண்டாகாரம்" எனச் சொல்லும், "பிரம்மானந்தசமுத்திரம்!" எனசொல்லும், "பிரஸாரூபமே"! இது காலாதீதமான, மனவாக்குக்கு எட்டாததான, காலதேச வர்த்தமான மற்றதுமான, நாமரூபகுணம் குறி கடந்ததான, "உண்டு" எனவும், "இல்லை" எனவும், சொல்லமுடியாததான, "மஹாமௌனமே! நாம்!" ஆனால் இதை சொல்லவோ உணர்த்தவோ முடியாது நின்றுகொம்



உ

இப்படிப்பட்ட மனத்தை, எப்படி மனதால் விலக்க முடியும்? ஆறுவ்?

இம்மனதின் வழியே சென்று தான், நாம் அது ஆகமுடியும். இதைத்தான் ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள், "கள்ளனைக் காவலாய் வைத்து, "கள்ளனுக்குள் உள்ளானை!" கண்டு கொண்டோமே! என்றார்கள். முன்பு யாம் கூறியபடி, நீங்கள் உங்கள் மனதால், இதுகாலபரியந்தம் செய்து வந்த "சாதனைகள்!" அனைத்தையும், உங்கள் சாதனை மனதால் எல்லாம் ஒன்றே! எல்லாம் நீயே! என நிர் "மூலமாக" எந்த விடை விடுகிறீர்களோ, அந்த "விடையே" நீங்கள் ஜீவன் முக்தர்களே!

மனதை மனதால் தான் விடமுடியுமேயன்றி, வேறு எந்த கர்மாவினாலோ, வேறு எந்த சாதனைகளினாலோ விடமுடியாது. அதாவது "எண்ணத்தை, எண்ணத்தால்!" விடுவாயாக. எல்லாம் ஒன்றே! எல்லாம் நீயே! என நிர்மூலமாக விடுவதே ஸ்வய ஞானுபவம் ஆகும். அதுவே நாம்! நாமே அது! இது ஸத்தியம்.

தி[illegible] பாபா.



உ

எண்ணத்தை எண்ணத்தால் விடுவாயாக!

ஒருகாலில், ஓர் முள் தைத்து, ஒடிந்துவிட்டால், அப்படி ஒடிந்த முள்ளை, இன்னொரு முள் கொண்டு எடுத்துவிட்டு, பின்னர் தைத்த முள்ளையும் அதை எடுத்த முள்ளையும், தூர எறிந்துவிடுவதுபோல்,

"எண்ணத்தை எண்ணத்தால்! "விடும் நிலையாகும்!"

உண்மையின் சாஸ்திரம் என்ன சொல்கிறது என்றால்? "சங்கல்பமே உலகம், சங்கல்பரஹிதமே மோட்சம் என, அறுதியிட்டு கூறுகிறது. அதாவது? "நாமரூபகுண!" கற்பனையே இந்த உலகம் என்றும், அக்கற்பனையை முழுமையாக விட்டு விட்டால், உலகம் இல்லை என்பதே, ஞானிகளின் ஸத்திய பிரமாணமான வாசகமாகும்.

ஆனால்???

அக்கற்பனையானது, சாமான்யமானது அல்லதான். அது நம் "மாயாமனதின்!" மானஸ (எண்ண) சிருஷ்டியாகும். ஸ்ரீபகவானின் நிலையில், "மாயையாக" இருந்தது. அதுவே மனிதனை மட்டும் பிடிக்கும் போது "மனமாக மாறிவிடுகிறது"! அப்படியானால்?



இந்த "மனமாயைக்கு"!

ஸங்கல்பத்தின் (எண்ணத்தின்)

வலிமை, மிக மிக மிக அதிகமானதுதான்.

எண்ணமே வாக்காகவும், வாக்கே செயலாகவும் (கர்மாவாகவும்) இருப்பதால், எண்ணங்களை அழிப்பது என்பது, இயலாத காரியமே. ஆகவே நாமரூப குண உலகமான, "அஸத்தான!" எண்ணத்தை, ஸ்ரீ பகவத் சொரூப நிலையில், சர்வசங்கபரித்தியாக (சர்வார்ப்பண) எண்ணத்தால் தான் அழிக்க முடியும்.

அஸத்தான எண்ணம்:– அஹங்கார, அதிகார, அபிமான, ஆதிக்க உடைமை, உரிமை ஆகியவைகளால், உறவு நட்பு இவைகளினால், சொந்த பந்த, பாச, பற்று வரவால் ஆனதாகும்.

ஸத்தான எண்ணம்:– எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே! என்ற நிலையில் "உன்னையன்றி வேறு கதியில்லை!" என முழுமையாக விட்டுவிடுவதே, ஸத்தான எண்ணமாகும்.

முதலில் உள்ள எண்ணமானது, நம் அறியாமையினால் தைத்த முள் ஆகும்.

இரண்டாவது உள்ள எண்ணமானது, நம் அறிவு சொரூபமான,



"ஜகத்துமின்றி, எதுக்கும் முன்னாகும்!!" பின் அவ்விருமையும் தானெனறியும் நிலையில், "காலாந்த பரானந்தமே!" செயல்படமுடியாத்தன்மையினால், அதுவே ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளாக, "நாமரூபங்கள்" தாங்கி வந்து "மனுவடிவமாக" குணகிரியங்களை ஏற்றுக்கொண்டு, தமக்கு ஓர் தேவத்தையும் ஏற்படுத்திக் கொண்டு, "தமக்குத்தாமே" விளையாடியது.

பின் அதுவே விளையாட்டை, போதும் என்ற நிலையில், நிறைவு செய்து கொண்டு, "பூரணமாய்" எங்கும் நிறைந்திருக்கிறது. என்பது எண்ணமல்ல. மேலே கூறிய அவ்விரண்டையும், முழுமையாக விட்ட நிலையில், "தாம்தாமாய்", முடிவற்ற ஆனந்தமாக இருக்கிறது. வாக்கிய விளக்கத்திற்காக "இருக்கிறது" என்றும், வாக்கும் விளக்கமும், அற்ற நிலையில் "இல்லை" யென்பதே ஸத்தியம்.

பாபா.



உ

"நாமரூபம்" அற்ற இடத்தில், "திருவடி" என்றால், அது சிறியதும் அல்ல, அது பெரியதும் அல்ல!

அது "சரணாலயம்" ஆகும்.

அதாவது உண்மையின் பக்தனை, உணர்ந்த ஞானியோ, தன்னை முழுமையாக சர்வார்ப்பணம் செய்யும் இடமாகும். "பக்தன்" என்றால், நாமரூபமுள்ள ஸ்ரீபகவானின் சரணாலயத்தில், முழுமையாக தம்மை "உடல்" "பொருள்" "ஆவி" முழுமையாக சர்வார்ப்பணம் செய்ய வேண்டும்.

ஜீவன் முக்தன் நிலைக்கு, அதாவது "ஞானி" நிலைக்கு சாதனை செய்பவன், தம்முடைய ஸ்ரீ ஸத்குருதேவரிடம், மேலே கூறியபடி, உடல், பொருள், ஆவி, ஆகிய இம் மூன்றையும், முழுமையாக, சர்வார்ப்பணம் செய்ய வேண்டும்.

இதில் ஓர் ரகஸியம்!

"ஸ்ரீபகவான்" திருவடியைக் காட்டுவான்!

"ஸ்ரீ ஸத்குரு" திருவடியைத் தருவார்!!



உ

ஸ்ரீபகவான் சூட்சுமம்! ஸ்ரீஸத்குரு தாவகம்!
சூட்சும ரூபம் திருவடியை காட்டி
"யாம் இருக்க பயம்" வேண்டாம்
என சொல்லும் இதன் உட்கருத்து:
ஸ்ரீபகவான் சொல்வதாவது:– உலகமும், அதன் பொருளும்,
"எம்முடையதே!" ஆனால் அவை அனைத்தும்,
"உனக்காக", உண்டாக்கப்பட்டதே!
அவைகளில் "உடமை! உரிமை!"
(சொந்தம் கொண்டாடாமலும், அதிகாரம் செலுத்தாமலும்)
"பாராட்டாமலும்" எம் நாமாவைச்
சொல்லிக் கொண்டு, தேவைகளையும், ஆசைகளையும்,
"குறைத்துக்" கொண்டு, எல்லாம்
என்னுடையதென, "தனிமை" பாராட்டாமல்,
எல்லாம் நம்முடையதேன, "பன்மை" பாராட்டி
உலகையும், அதன் வஸ்துக்களையும், நீ அனுபவித்தால்
"தோஷம்" இல்லாத தன்மையினால் எம் திருவடியை
நம்பிய உன்னை ரக்ஷிக்கிறோம். என ஸ்ரீபகவான்
வாக்கியமாகும்.



உ

நாதரூபமாயிருக்கும் ஸத்குரு நம்

"திருவடியை கொடுத்து"

இத்திருவடியின் பரிபூரண அம்சம், "பரசொரூபமாகும்"

காரணம்?

"இறைகுரு கருணையால்"

பக்தனாகவும், ஸ்ரீபகவானாகவும், ஸ்ரீ ஸத்குருவாகவும்;

அவன் அருளால் அவன் தாள் வணங்கி! என்ற

நிலையில் சாதனை பல செய்து, "அந்நிலை"யை

பெற்று விட்ட தன்மையால், திருவடித் தாஸியே

"தாஸி" என்ற நிலையில், ஜீவ அணுவாகவும்;

அதுவே ஆத்மாவாகவும், அதுவே பரமாத்மாவாகவும்,

அதுவே "பரசொரூபமாகவும்"

இருப்பதால், உடல், உலக, பொருள்களை, ஸ்ரீ பகவானிடம்

எல்லாம் நீயே என சர்வார்ப்பணமாக விட்டு விட்டு,



"ஜகத், ஜீவ, ஈஸ்வ ராதிகள்" அனைத்து "நாமரூபங்களையும்"!

நாமரூபங்களாக காணாமல், இவை அனைத்தும் பரமேயென்றும்

பரத்துக்கன்னியம் எதுவுமே இல்லையென்றும், ஆகவே

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்"!

என்றும், "ஜெகம், பரமும், ஜீவர்களும், எக்காலமும் முக்காலமும், சிறிதுமில்லை"!

என அறுதியிட்டு, உறுதியாக, ஸத்திய பிரமாணமாக,

"உணரவைப்பது, ஸத் குரு திருவடியின் கீழே உள்ள, "நான்" ஆகிய ஆத்மாவேயாகும்!!!!!

ஆகவே ஸ்ரீ ஸத்குரு திருவடியை தந்தருளுகின்றார்.



உ

எம் ஸ்ரீ ராம கிருஷ்ண பரம ஹம்ஸ தேவர், ஓர் இடத்தில் சொல்லும் போது:

"பாகவதம்", "பக்தன்", "ஸ்ரீ பகவான்", ஆகிய இம்மூன்றும் "ஒன்றே" என்பார்.

காரணம்:— ஸ்ரீ பகவானின் பூஜை தாளி ஆகும்! ஸ்ரீ பகவானின் இருப்பிடமும் தாளி ஆகும்! ஸ்ரீ பகவத் சொரூபமும் தாளி ஆகும்! இதன் உட்பொருள்:

பாகவதம் என்றல், ஸ்ரீ பகவானையும், ஸ்ரீ பக்தனையும், ஒன்றாக்கி: அதை பரசொரூப அம்ஸமாகிய தாளி ஆக்கி, அத்தாளியை, "பக்தனின் பாதங்களாக்கி", அப்பாதங்களை ஸ்ரீ பகவான் தம் சிரம் மேல் தாங்கிக்கொண்டு, இதுவே எம் புகலிடம் என்றும், எம் இருப்பிடம் என்றும், எம்முடைய அம்ஸம் என்றும் சொல்லி, "யாமும்நீயும்" தாளியின் அம்ஸமாகிய ஆத்மாவே என்றும், அத்தாளியின் இருப்பிடம் ஸ்ரீ மஹான்களின் "ஸத்குருவின்"



உ

"திருவடியே!" என பிரமாண
மாக சுட்டி உணர்த்துவதால்,
திருவடியின் மகிமையை அந்த தேவர்
மூவராலும், உரைக்க முடியாது!
ஆகவே ஸ்ரீ மஹான்களின் அனுபவம் என்னவென்றால்?
ஸ்ரீ பகவானின் "பாதம்" பக்தன் சிரசில்
படலாகாது என்றும்; ஓர் பக்தனின் "பாதம்"
ஸ்ரீ பகவான் சிரசில் "படவேண்டும்"!
என சுட்டிக்காட்டுவதற்காகவே, வைணவ ஆலயங்க
ளில், "ஜடாரி" என்ற ஸ்ரீ பகவானின் மகுடத்தில்
"பக்தனின்" பாதங்களை பதியவைத்து,
அதை ஸ்ரீ பகவான் பணிவுடன் ஏற்றருள்வது போல்,
அவன் அன்பர்களும் அதை பணிவுடன் ஏற்றுக்கொண்டு
அந்த ஸ்ரீ பாதங்களின் தூளியே ஸ்ரீ பகவான் என்றும்;
ஸ்ரீ பகவானே தூளியென்றும்; அதுவே ஆத்மா என்றும்;
"அதுவே நாம்! நாமே அது!" என
பிரமாணமாக உணர்த்துவது திருவடியே ஆகும்!!!
எல்லாம் ஒன்றே! அது நமதே!
அதுயாமே!
அது நீங்களே! இது ஸத்யம்! இது ஸத்யம்! இது ஸத்யம்!!!

பாபா.



உ

என் திருவடியையும், அதன் ஒளியையும், அதன் அம்ச பரசொரூபத்தையும் இணைத்து சொல்கிறேன் என்றும்,

"பாதம் பணிவதே!"

"பணிவின்"

லட்சணமும் ஆகும். லட்சியமும் ஆகும்!

"பணிவே" பரம பதமும் ஆகும்! பரசொரூபமும் ஆகும்!!

பணிவில்லையானால் எதையும் சாதிக்க முடியாது!

பணிந்தால் "பாதகங்கள்!" நீங்கும்.

பணிந்தால் "பாதகமலம்!" சாத்தியமாகும்.

பணிந்தால் பாதம் என்னும், "திருவடியும்"

அதன் அம்ச ஒளியும், சாத்தியமாய், அதன் அம்ச

"ஆத்மா!" நாம் ஆகவும் "நாம்!" ஆத்மாவாகவும்

ஆவோம் எனச் சொல்லி, அதுவே நீங்கள் என முடிக்கிறேன்.

அதுவே யாம்! அதுவே நீங்கள். பாபா.

இது லட்சியம்!


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!